Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மேவின்
ரெயிலறிங் அன் காமன்ஸ்
15 வருட காலமாக யாழ். குடாநாட்டில் அநேகரின் நன்மதிப்பைப் பெற்ற எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் சேவையாற்றி வருகிறது.
அனைவரதும் விருப்பம் போல.
கல்யாண சூட் - சர்வாணி
நெஷனல் - சேட்
லோங்ஸ் - சோட்ஸ்
இலாஸ்டிக் சோட்ஸ்
போன்ற ஆண்களுக்கான சகல தையல் வேலைகளையும் பெற நாடுங்கள்
28, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
(சி-075)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 25 (01.11.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 32



நட்புறவுச் சூழலில் கலந்துரையாடும் கேணல் கருணா, அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், ஹக்கீம், பீரிஸ். (படங்கள்: நொகன்பத்தமிலிருந்து விதுர்ஷன்)



பேச்சுவார்த்தை மேசையில் தமிழ்ச்செல்வன், அடேல், பாலா, கருணா, வெஸ்ட்பேர்க் - மறுபுறஞ் ஹக்கீம், பீரிஸ், மிலிந்த - நடுவே ஹெல்கிஸன்.

# கூட்டுச் செயலணிக்கான இறுதி வடிவம்

# நேற்றைய பேச்சுக்களில் ஆராய்வு!

## கிழக்குப் பற்றியும் முக்கிய முடிவுகள்

(நொகன்பத்தமிலிருந்து விதுர்ஷன்)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று ஆரம்பமான இரண்டாம் கட்டப் பேச்சில் கூட்டுச் செயலணிக்குழுவின் இறுதி வடிவம் பற்றி ஆராயப்பட்டதுடன் கிழக்கு விவகாரங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து சில முடிவுகள் எடுக்கப்பட்டன.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் சுற்றுப் பேச்சு, தாய்லாந்து நேரப்படி நேற்று மாலை 3 மணிக்கு ஆரம்பித்தது. பலத்த பாதுகாப்பின் மத்தியில் தாய்லாந்து ரோஸ் கார்டன் ஹோட்டலில் இரு தரப்புப் பிரதிநிதிகளும் சந்தித்துக் கொண்டனர். இரவு 8 மணிவரை தொடர்ந்த இப்பேச்சுக்களில், முதல் சுற்றுப் பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகள், விபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

நேற்றைய பேச்சுக்களின்பொழுது புலிகள் தரப்பில்- விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று இரண்டு அமர்வுகள்; கொழும்பு அரசியல் பற்றி ஆய்வு!

(நொகன்பத்தம்)

இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இரண்டு அமர்வுகளாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய பேச்சுக்களில் கொழும்பில் நிலவும் அரசியல் உறுதியின்மை குறித்து ஆராயப்படுமென புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## செயலணியின் பொறுப்பில் வட.- கிழக்கு அரசு - புலிகள் தரப்பில் தலா மூவர்!

### நோர்வே தரப்பிலிருந்தும் ஒருவர் நியமனம்

தாய்லாந்தில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் - விடுதலைப் புலிகள், அரசாங்கம் என்பன இணைந்த கூட்டுச் செயலணிக்குழு பற்றிய, திட்டநகல் வரைபின் இறுதிவடிவம் ஆராயப்பட்டது. நோர்வே தயாரித்த கூட்டுச் செயலணிக் குழுவிற்கான திட்டவரைபின் வடிவமொன்றுக்கான இறுதிக்கட்ட உடன்பாடுகள் நேற்றைய தாய்லாந்துப் பேச்சுக்களில் காணப்பட்டன.

நோர்வேயினால் தயாரிக்கப்பட்டிருந்த இத்திட்டநகலில் - கொள்கைத் திட்டமிடல், மூலவளங்களை இனங்காணுதலும் தெரிவுசெய்தலும், அமுலாக்கல் விடயங்களைக் கையாளல், மேற்பார்வை செய்தல் ஆகிய

(10ஆம் பக்கம் பார்க்க)



பேச்சுக்கள் ஆரம்பிக்க முன் கைலாகு கொடுக்கும் பாலா - பீரிஸ்.

### மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கு

## பிரபாவுக்கு 200 வருடச் சிறை கொழும்பு மேல் நீதிமன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

1996ஆம் ஆண்டு கொழும்பு மத்திய வங்கி குண்டுவெடிப்புடன் தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டதாகக் கூறி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 200 வருடகால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் குற்றங்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



நானும் வந்து ஒரு மாசமாச்சுப் பாருங்கோ...



பாலாவின் அறிமுகத்துடன் மிலிந்த, கருணா கைலாகு கொடுக்கின்றனர்.

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் சிநேகிதியே, விருந்தினர் பக்கம், அதிர்ஷ்ட வாரம்

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.

நிறுவுநர் நினைவு நாளும்
பரிசளிப்பு விழாவும்

காலம் : 02-11-2002 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம் : ஒரேற்றர் மண்டபம்

தலைவர்
திருமிகு.க.சிவாஜி அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்
கலாநிதி சி.மகேசன் அவர்கள்
B.Sc. (Hons), M.Sc. (CARDIFF), Ph.D, M.B.C.S.C.Eng.
(தலைவர், கணினித்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

ஆசியுரை
அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.)
தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

நிறுவுநர் நினைவுப் பேருரை
கலாநிதி பொ.நவரட்னம் அவர்கள் (B.Sc., M.Sc., ph.D)

பரிசில் வழங்கல்
திருமதி ராஜசிவசக்தி மகேசன் அவர்கள் (B.Sc., MSc.)
பகுப்பாய்வாளர், கணினித்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

நிறைவுரை
திருமிகு ஆறுதிருமுருகன் அவர்கள்
ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.


# வடபகுதி புனர்வாழ்வு அமைச்சு அலுவலகம் யாழ்ப்பாணத்தில்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அலுவலகம் ஒன்று மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணத்திலும் வடபகுதியின் ஏனைய பகுதிகளிலும் மேற்படி அமைச்சின் செயற்பாடுகளை ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்வதற்கு வசதியாகவே இவ் அலுவலகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்படி அமைச்சின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (க,லி)

# ஆறு அரசாங்க பஸ் கம்பனிகள் பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு விற்பனை

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் கம்பனிகளில் ஆறு நிறுவனங்கள் நேற்று பிரிட்டன் பஸ் நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்பட்டுள்ளது.

கொழும்பு, .களுத்துறை, கம்பஹா, அநுராதபுரம், கண்டி, சப்ரகமுவ மக்கள்மயப்படுத்தப்பட்ட பஸ் நிறுவனங்களின் 39 சதவீதப் பங்குகள் பிரிட்டனின் ஐ.பி.ஐ.எஸ். நிறுவனத்திற்கு விற்கப்பட்டது இந்த பிரிட்டன் நிறுவனத்தின் தலைவராக முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பஸ் கம்பனிப் பங்குகள் விற்கப்பட்டதனால் நேற்று கொழும்பு பங்குச் சந்தையில் 100 வருடங்களுக்குப் பின் ஆகக் கூடுதல் பங்கு விற்கப்பட்டதற்கான சாதனை ஒன்று ஏற்பட்டது.

சுமார் 1450 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகள் நேற்று விற்பனையாகின.


ஆண்களுக்கான சகலவிதமான ஆடைகளும் சிறந்த முறையில் தைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்டார் தையலகம்

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
(சி-117)

சிறப்புத் தள்ளுபடி!
சிவம்ரெக்ஸ்ரைல்

- நங்கையர் விரும்பும் நவநாகரிக சேலைகள்
- திருமண வைபவங்களுக்கான பட்டுப்புடைவைகள். பட்டு வேட்டிகள்
- உயர்தர சேட்டிங், சூட்டிங்ஸ்
- அனைவருக்கும் ஏற்ற றெடிமேட் ஆடைகள்

எதுவானாலும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
சிவம் ரெக்ஸ்ரைல்
K.K.S. வீதி (இணுவில்) கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(சி-118)

PASSION
When Style Matters
கலையம்சத்துடன்
வடிவமைக்கப்பட்ட பைக்


RG
இரத்தின கோபால்ஸ்
ஆர்.ஜி.பில்டிங்,
63, 65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
Splendor
World No.1
தீபத் திருநாளில்
குதூகலப் பயணத்திற்கு
உங்கள் தெரிவு


HERO HONDA
World No. 1
Two-Wheeler Company
(சி-120)

# அமைதி வழியில் புலிகள் மிக உறுதியாகவுள்ளனர்!

## மட்டு. - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன்

(நமது நிருபர்)

போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்பும் நாம் ஆட்சேர்ப்பு நடத்தாமலேயே எமது அமைப்பில் அண்மைக்காலத்தில் இளைஞர்கள் தொடர்ந்தும் தாமாக இணைந்து வருகின்றனர் என விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் - கொக்கட்டிச்சோலையிலுள்ள, மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில் -சமாதான காலத்தில் ஏனைய இராணுவ அமைப்புக்கள் செய்வதை ஒத்ததாக நாமும் எமது போராளிகளுக்கான பயிற்சிகளை வழங்கி, எமது படையணிகளைத் தயார்நிலையிலேயே வைத்துள்ளோம்.

சமாதானத்தைக் குழப்புவதற்கு, சில ஊடகங்களின் உதவியுடன், சில தீயசக்திகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் - எமது தேசியத் தலைவரின் வழி நடத்தலில் நாம் அமைதி முயற்சிகளில் எம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம்.

நாம் எமது மக்களின் உரிமைக்காகவே ஆயுதமேந்திப் போராடினோம். யுத்தத்தை நிறுத்தியபோதும், ஆயுதங்களற்ற - வன்முறைகளற்ற பாதையில் எமது மக்களின் உரிமைகளுக்காகவும் வட-கிழக்கில் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் இன்றும் போராடுகின்றோம்.

காஞ்சிரங்குடாவிலோ, அக்கரைபற்றிலோ நடந்த சம்பங்களுக்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்புகளுமில்லை. ஆனால் சில ஊடகங்கள் - சில தீய சக்திகளுக்காக எம்மைச சேர்த்து சிண்டு முடியப் பார்த்தன என்றும் கூறினார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் மட்டு. - அம்பாறை புலனாய்வுத துறைப் பொறுப்பாளர் ரமணன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா, ஊடக இணைப்பாளர் கிருஷன், மட்டு. - அம்பாறை மாவட்ட நீதி நிர்வாகப் பொறுப்பாளர் யோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக கௌசல்யன் நியமிக்கப்பட்டதன் பின்னர், நடாத்தப்பட்ட முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## கத்தோலிக்கபாட அறிமுக கருத்தரங்கு

புதிய கல்வி சீர்திருத்தத்திற்கமைய கத்தோலிக்க சமயத்தை தரம் 6 தொடக்கம் தரம் 12 வரை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தும் கருத்தரங்கும், செயலமர்வும் நல்லூர் சி.சி.த.க. பாடசாலையில் இன்றும் நாளையும் நடைபெறவுளளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## விபத்தில் காயம்

முச்சக்கரவண்டியும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் வந்தவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கூழாவடிப்பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் செபமாலை சூசைதாசன் (வயது 45) என்பவரே காலில் காயமடைந்தவராவார். (55)

## ஒரு வருடத்திற்கு அதிகமாக காத்திருக்கும் அம்புலன்ஸ் படகு!

(திருமலை நிருபர்)

திருகோணமலை- மூதூர் நோயாளர் போக்குவரத்துக்காக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகை சேவையில் ஈடுபடுததுவதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படாததால் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

15லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த அம்புலன்ஸ் படகை சேவையில் ஈடுபடுத்த துறைமுக அதிபரின் அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால் ஒரு வருடத்திற்கு மேலாக, துறைமுகத்தில் இப்படகு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கென சுகாதார திணைக்களம் காவலாளி ஒருவரையும் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

மூதூரில் இருந்து நோயாளிகளை விரைவாக திருமலை வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்காக கொள்வனவு செய்யபட்ட இப்படகைப் பயன்படுத்த, அனுமதி வழங்கப்படாதுள்ளதால் வேறு தேவைகளுக்கு அப்படகைப் பயன்படுத்துமாறு வட-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரனிடம் கேட்டுள்ளார். (05)

## இராணுவ ஜெனரல்கள் சேவை நீடிப்பு விபர அறிக்கை கோரும் ஜனாதிபதி

(கொழும்பு)



இராணுவத்தின் சில மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளின் சேவை நீடிப்புத் தொடர்பான அறிக்கையைத் தமக்கு உடனடியாக சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சின் செயலரையும், பாதுகாப்பு மறுசீரமைப்புக் குழுவின் செயலரையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் ரணிலுடனான சந்திப்பைத் தொடர்ந்து ஜனாதிபதியின் இந்த உத்தரவு வெளிவந்துள்ளது. எட்டு இராணுவ மேஜர் ஜெனரல்களுக்கு சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி மறுத்துவிட்டதாக முன்னதாக வெளியான செய்திகளை தொடர்ந்து ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பு கடந்த திங்களன்று நடந்தது குறிப்பிடத்தக்கது. இதேவேளை - சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி மறுத்ததாக வெளிவந்த செய்திகளை ஜனாதிபதி செயலகம் மறுத்திருந்தது.

## "சதொச" தனியார்மயமாகும்; இறுதி ஏற்பாடுகளில் அரசு!

(கொழும்பு நிருபர்)

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை (சதொச) தனியார்மயப்படுத்துவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆராய்வதற்கு தென்னாபிரிக்காவில் இருந்து விசேட குழுவொன்று கொழும்பு வரவுள்ளது.

சதொச நிறுவனத்தில் 60 சதவீத முகாமைத்துவப் பங்குகளைத தனியாருக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே சதொசவின் பங்குகளை விற்பனை செய்வதற்காகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருந் த...

இதற்கு நான்கு வெளிநாட்டு நிறுவனங்களும், 20 உள்ளூர் நிறுவனங்களும் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தன. இவற்றுள் தென்னாபிரிக்க நிறுவனம் ஒன்றுக்கே சதொசவின் 60 சதவீத முகாமைத்துவப் பங்குகள் விற்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தனியாரிடம் 60 சதவீத நிர்வாகத்தைக் கையளிப்பதற்கான இறுதிகட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கின்றது. இதற்காக நாடு முழுவதும் உள்ள கிளைகளின் இருப்பு விபரம் மற்றும் ஊழியர்களின் விபரங்களுடன் பிராந்திய முகாமையாளர்களைக் கொழும்புக்கு வருமாறு அழைத்துள்ளது.

இதேவேளை, சதொசவின் 60 சதவீதப் பங்குகளை கொள்வனவு செய்யவுள்ளதாக நம்பப்படும் தென்னாபிரிக்க நிறுவனம் ஒன்றின் அதிகாரிகள் குழு இவ்வாரம் கொழும்பு வரவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## சாரதி அனுமதி பத்திரங்கள்; 50ஆயிரம் கொழும்பில் தேக்கம்

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான சுமார் 50 ஆயிரம் விண்ணப்பங்கள் கொழும்பில் உள்ள மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தில் குவித்து கிடக்கின்றன

புதிய சாரதி அனுமதி பத்திரத்தைத் தயாரிக்கக் கேள்வி அறிவித்தல் எதுவும் மோட்டார் பதிவுத் திணைக்களத்தினால் கோரப்படாமையே இவ்வாறு விண்ணப்பங் கள் தேங்குவதற்கு காரணம் எனத் கூறப்படுகிறது.

தற்போது வெளிநாடு செல்லும் சாரதி அனுமதிப்பத்திரம் தேவையானவர்களுக்கு மட்டுமே அவை வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டியச் சிங்களத் தலைவர்கள் கேட்ட சுயநிர்ணயத்தையே தமிழர்கள் கேட்கின்றனர்!

### கொக்கரல்ல விகாராதிபதி புண்ணியசாரதேரோ

முன்னைய இலங்கை பல இராச்சியங்களாக இருந்தது. ஒரே அரசின் கீழ் ஆளப்படவில்லை. ஆங்கிலேயர்களே தமது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்காக ஒரே குடைக் கீழ் கொண்டு வந்தார்கள். ரஜரட்டை, மாயரட்டை, உறுகுணை என்று பிரிந்திருந்த நாட்டில், யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது. எனவே பிரிந்து செல்வதற்கோ, அதிகாரங்களைப் பன்முகப்படுத்து வதற்கோ உரிமை தமிழருக்கு உண்டு என்று கொக்கரல்ல விகாராதிபதி புண்ணியசார தேரோ தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்காகவும், அபிவிருத்திக்கான இயக்கம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடத்திய கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

சுயநிர்ணய உரிமைகள் பற்றி முதலில் கோரிக்கை விடுத்தவர்கள் கண்டியைச் சேர்ந்த கல்விமான்களே. சோல்பரிக் குழுவின் முன் இக்கோரிக்கையை வைத்த போது, கல்வியற்றவர்கள் தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்தாக இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கண்டிச் சிங்களத் தலைவர்கள் கேட்டதையே இன்று தமிழர்கள் கேட்கின்றார்கள். இனவாதிகளால் இனிமேல் நாட்டைக் குழப்ப முடியாது என்று தேரர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

## வருடாந்த இடமாற்றங்களுக்கு ஆசிரியர்கள் விண்ணப்பம்

(திருகோணமலை)

வட-கிழக்கு மாகாண மட்டத்தில் மாவட்ட, பிரதேச ரீதியான வருடாந்த இடமாற்றங்களைக் கோரி ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வருகின்றனர்.

இடமாற்றத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பும் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் கிராமிய பாடசாலைகளுக்கும் விண்ணப்பித்துள்ளனர். தற்போது நிலவும் சமாதானச் சூழ்நிலையிலேயே அதிகளவானோர் கிராமப்புறப் பாடசாலைக்கு விண்ணப்பிப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

சில நகரப்புறப் பாடசாலைகளின் அதிபர்கள் தமது ஆசிரியர்களுக்கு கிராமப்புறப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

## பேச்சுகளில் புலிகளின் ஈடுபாட்டை பெருமளவு சிங்கள மக்கள் நம்புகின்றனர்!

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வைக்காண விரும்புகிறது என்பதைச் சிங்கள மக்களின் பெரும்பான்மையினர் நம்புகின்றனர் எனக் கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி முதல் அக்டோபர் 10 ஆம் திகதிவரை கருத்துக் கணிப்பை நடத்திய மாற்றுக் கொள்கைக்கான நிலையம் இதைத் தெரிவித்துள்ளது. கருத்துக் கணிப்பில் பங்கு பற்றியவர்கள் மூலமே இத்தகவல் திரட்டப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் மக்களை ஏமாற்றுவதற்காகப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதாகச் சிங்கள மக்கள் மத்தியில் இருந்த அபிப்பிராயம் மாறிவருகிறது என்று ஆய்வுமூலம் தெரியவருகின்றது.

யுத்தத்தின் மூலம் அரசோ, புலிகள் இயக்கமோ வெற்றிகாண முடியாது என்பதை நம்புபவர்களின் தொகையும் கணிசமாக அதிகரித்து வருகின்றது என்றும் -

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு கிடைக்க வேண்டுமென பெரும்பான்மை மக்களும், சிறுபான்மை மக்களும் பொதுவான கருத்தைத் தெரிவித்துள்ளனர் என்று ஆய்வுமூலம் மேலும் தெரியவருகின்றது.

இந்த ஆய்வு 17 நிர்வாக மாவட்டங்களில் - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகியன அடங்கலாக மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## செவிப்புலன் வலுவற்றோர் சங்கத்துக்கு அமைச்சர் ஓட்டோ அன்பளிப்பு

(நெல்லியடி)

யாழ். மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் சமூகத்திற்கு இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் ஓட்டோ ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அன்பளிப்புச் செய்யப்பட்ட ஓட்டோ கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து சங்கப் பணிமனைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இந்த வாகனத்தினால் தமது போக்குவரத்து தேவை தொடர்பில் அதிக நன்மை அடையமுடியும் என செவிப்புலன் வலுவற்றோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (13)

## ஆசிரியர்களுக்கு வங்கிக்கணக்கு அவசியம் இனி காசோலை மூலமே சம்பளம்

(கொழும்பு)

கல்வி,மனிதவள அமைச்சு இனி வருங்காலங்களில் சகல ஆசிரியர்களுககான மாதாந்தச் சம்பளத்தை காசோலை மூலம் வழங்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

அமைச்சின் செயலாளர் வி.கே நாணயக்கார இது தொடர்பாக சுற்று நிருபம் ஒன்றைக் கடந்த வாரம் அனுப்பியுள்ளார்.

இதேவேளை புதிய சுற்று நிருபத்தின்படி சகல ஆசிரியர்களுக்கும் வங்கிக கணக்கு இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சமாதான விரோதிகளிடம் ஷரோன் சரண்

# பலஸ்தீன - இஸ்ரேல் சமாதானம் எட்டாக்கனியாகச் செல்கிறது!



கூட்டுப் பங்காளிகளின் மத்தியில் ஆதரவு தேடும் ஏரியல் ஷரோன்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலின் ஆளும் கூட்டரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டதையடுத்து, பாலஸ்தீன-இஸ்ரேல் சமாதான ஏற்பாடுகள் அனைத்தும் மிகமோசமான பின்னடைவுகளைச் சந்திக்கும் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் ஏரியல் ஷரோனின் லிக்குட் கட்சியும் இஸ்ரேலின் தொழிற் கட்சியும் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்திருந்தன. 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் யூதக் குடியேற்றத் திட்டங்களில் பெருமளவான நிதியை பிரதமர் செலவழிக்க விரும்பியதையடுத்து, தனது எதிர்ப்பை தெரிவித்த இஸ்ரேலின் தொழிற்கட்சி, சமூகநலன் பேணும் திட்டங்களிலும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதிலும் பெருமளவான நிதியைச் செலவு செய்ய வேண்டும் என வலியுறுத்தியது. ஆனால் பிரதமர் ஷரோன் தனது வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளை எதிர்ப்பவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவர் என எச்சரித்தார்.

இஸ்ரேலின் தொழிற்கட்சியின் மத்திய குழுவும் பிரதமரின் வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளை எதிர்த்து வாக்களிப்பது எனத் தீர்மானித்தது.

இந்தப்பின்னணியில் இஸ்ரேலின் தொழிற்கட்சித் தலைவர் பென்யமின் எலிசர் தான் வகித்து வந்த பாதுகாப்பு அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார். அவ்வாறே வெளிவிவகார அமைச்சர் பதவியை வகித்து வந்த தொழிற்கட்சியைச் சேர்ந்த சிமோன் பெரசும் தனது பதவியை துறந்தார்.

இந்நிலையில் தொழிற்கட்சி தடம் புரண்டிருந்தாலும் தான் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கப்போவதாக பிரதமர் ஏரியல் ஷரோன் கூறியுள்ளார். முன்கூட்டியே தேர்தல்களுக்கு ஆயத்தம் செய்யாமல் புதிய கூட்டு ஒன்றை அமைத்தலே தனது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏரியல் ஷரோன் தீவிர தேசியவாதக் கட்சிகள் மற்றும் மதக் கட்சிகள் (**ultra-nationalist and religious**



**பதவி விலகும் இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் பென்யமீன் எலீஸர்**

**parties)** ஆகியவற்றின் ஆதரவுடன் ஆட்சியில் தொடர்ந்து நீடிக்க விரும்புகிறார்.

தீவிர தேசியவாதக் கட்சியான இஸ்ரேயில் பெயிற்றெனு கட்சியைச் (**Yisrael Beitenu Party**) சேர்ந்த தலைவர்களுடன் பிரதமர் ஷரோன் ஆதரவு வேண்டி பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறு தீவிர தேசியவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதன் மூலம் இஸ்ரேல் அரசாங்கம், பலஸ்தீனிய விவகாரத்தில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க, எள்ளவும் சாத்தியம் இல்லாத நிலையைப் பெறவே வாய்ப்பு உள்ளதாக செய்தியாளர்கள தெரிவித்தனர்.

பலஸ்தீனத்தின் பிரதம பேச்சாளர் சயிப் எறகற், சமாதான நடைமுறையிலிருந்து இஸ்ரேலின் அரசியல் மேலும் மேலும் தூர விலகிச் சென்று கொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

அதேவேளை - பதவியிலிருந்த பொழுது பலஸ்தீனத்திற்கு எதிராக கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் இஸ்ரேலிய இராணுவத்தின் ஓய்வு பெற்ற முன்னாள் தளபதியொருவர்

உலகவலம்

இஸ்ரேலின் புதிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்பதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார். இதற்கான அங்கீகாரத்தை இஸ்ரேலியப் பாராளுமன்றம் வழங்கியுள்ளது.



# மொஸ்கோ பணய நாடகம்; மேய்ப்பனை மேய்ப்பது யார்?

**மொ**ஸ்கோ பணயக்கைதிகள் நாடகம் அந்த அரங்கில் முடிவுக்கு வந்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால் அதன் மர்மங்கள் மர்மங்களாக நீடிக்காமல் சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கிவிட்டன. யாரை யார் நம்புவது என்ற தத்துவம் மட்டுமே எஞ்சிநிற்கிறது. ரஷ்யப் பாதுகாப்புப் படைக்குள் தங்களுக்குப் பணியாற்றுவோரை இனங்கண்டு 'நியமனங்கள்' வழங்குமளவுக்கு செச்சினிய விடுதலை அமைப்புக்கு பலம் பொருந்திய ஒரு வளர்ச்சி கிடைத்துவிட்டதா? அல்லது செச்னிய விடுதலைப் போராளிகளுடன் சர்வதேச பயங்கரவாத வலைப்பின்னல் சேர்ந்து கொண்டதா? அந்நிலையில் இப்படியொரு திட்டமிட்ட பணய நாடகம் அரங்கேற்றப்பட வாய்ப்புக் கிடைத்ததா? பாதுகாப்பு அதிகாரிகள் சிலரும் சிவில் அதிகாரிகள் சிலரும், பணய நாடகத்தை அரங்கேற்றியவர்களுடன் பூரணமாக ஒத்துழைத்திருக்கிறார்கள். அவர்கள் தற்கொலையாளிகளுக்கு ஆயுதங்களைக களஞ்சியப்படுத்தவும் தங்கியிருந்து திட்டமிடவும் மொஸ்கோவில் இடவசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். சகல தகவல்களையும் திரட்டிக் கொடுத்திருக்கிறார்கள். பணய நாடகம் தொடங்கிய பின்னர் பணயக் கைதிகளை மீட்பதற்கு என அமைக்கப்பட்ட செயற்பாட்டகத்தினுள் என்ன மாதிரியான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன, நகர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பன போன்ற சகல விடயங்களையும் 'உள்ளாளும் கள்ள ஆளுமாக' நின்று செச்னியப் போராளிகளுக்கு அறிவித்திருக்கிறார்கள் அந்த ரஷ்ய அதிகாரிகள்.

நிலைமைகள் இவ்வாறு சிக்கல்கள் நிறைந்ததாகவிருக்க ரஷ்யாவின் 'மீட்பனாக'க் கருதப்படுகின்ற விளாடிமிர் புட்டினுக்கு மிக மோசமான அவப் பெயரை உருவாக்கும் விதத்தில் அரங்கின்மீது நச்சுவாயு பிரயோகித்து, நூற்றுக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் மடியும் வகையில் பணய நாடகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறாக பரபரப்பும் மர்மங்களும் சந்தேகங்களும் நிறைந்ததாக ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ தென்படுகிறது.

பல கேள்விகள் எஞ்சி நிற்பதாக மொஸ்கோவில் நிலைகொண்டு செய்திகளையும் தகவல்களையும் திரட்டிவரும் நடுநிலையான செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

★ பணயக் கைதிகளையும் பணயம வைத்திருந்த தற்கொலையாளிகளையும் ஒன்றாகக் கொன்று தீர்த்த அந்த நச்சு வாயு என்ன?

**இங்கே ஒரு விடயத்தை யாரும் தெளிவாக விளங்கிக் கொள்வார்கள். நச்சுவாயு விவகாரம் என்பது, புலனாய்வு விடயங்களிலிருந்து நோக்கக்கூடிய அம்சங்களைச் சிதைக்கவும், குழப்பவும் கூடிய வகையில் (as a distraction from the intelligence issues) திட்டமிட்டு நன்றாகக் கையாளப்படுகின்றது. ஏதோ அதன் மனிதாபிமான, மருத்துவ ரீதியான விவகாரங்களுக்கு ஊடாக அனுகப்பட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, 'ஆடு நனைகிறது என ஓநாய் அழும்' கதையாக, சார்பு நிலையில் தளம் கொண்டுள்ள செய்தி ஊடகங்களால் 'செய்திப் பதப்படுத்தலுக்கு' உட்பட்ட விவகாரமாக மாறுகிறது. ஆனால், விளாடிமீர் புட்டின் ஒன்றை தெளிவாக ஏற்கனவே சொல்லிவிட்டார். இவ்விவகாரத்தில் வெளிநாட்டு சக்திகளுக்கு நிறையவே தொடர்பு இருக்கிறது என்பதாகும்**

★ ரஷ்ய விசேட படைப்பிரிவு தவறான அளவுக்கு வாயுவைப் பயன் படுத்தியதா?

★ ஏன் மருந்துவர்களுக்கு பயன் படுத்தப்பட்ட வாயு என்ன என்று கூறப்படவில்லை?

இவ்வாறான கேள்விகளை ஒரு பக்கத்திலே ஒதுக்கிவிடலாம். ஆனால், இன்னும் சிக்கலான சில கேள்விகளும் உள்ளன.

★ இவ்வளவு பெருந்தொகையான ஆயுதங்கள், வெடிப்பொருட்களுடன் 53 போரளிகள் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்குள் அணிசேருமளவுக்கு ரஷ்ய புலனாய்வுத் துறையினர் மிகமோசமான - தோல்விகரமான சூழ்நிலையில் இருந்தார்களா?

★ ஏன் அவ்வாறான போராளிகளின் அசைவுகள், நகர்வுகள் பின் தொடரப்பட்டு கண்டு பிடிக்கப்படவில்லை ?

★ 1999 செப்ரெம்பரில் செச்னியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்ததிலிருந்து மிகக் கடுமையான பாதுகாப்பு வலைப் பின்னலை (**the security net**) கொண்டிருக்கின்ற மொஸ்கோவுக்குள் இவ்வளவு பெரிய தொகையான போராளிகள் உள்ளே வழுக்கிக்கொண்டு வர எப்படி முடிந்தது?

நிச்சயமாக இவ்வினாக்கள் எல்லாம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் திட்ட அட்டவணையில் முன்னுரிமை கொடுக்கப்படும் வினாக்களாகவே அமையும்.

நேர்மையான ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள், கடுமையாக கவலைப் படுகின்றமைக்கு தீர்க்கமான நியாயங்கள் உள்ளன. ஏனெனில் விளாடிமிர் புட்டின் அடிப்படையில் ஒரு சாதாரண அரசியல் வாதியல்ல. இராணுவ விஞ்ஞானங்களையும், புலனாய்வு வடிவங்களையும் கசடறக் கற்ற ஒரு தொழில் முறையான புலனாய்வு நிபுணரே புட்டின். அவருக்கு எல்லா விடயங்களினதும் 'உள்ளகம்' நன்றாக, மிகநன்றாகவே விளங்கும்.

இந்நிலையில் ஒரு 'பெரும் மேய்ப்பனை' சாதாரண மந்தையாக்க முயற்சிக்கப்பட்ட ஒரு உயர் வலுவான செயற்பாட்டுத் திட்டமா இது என ரஷ்ய தேசபக்தி மிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கவலையும், அதேவேளை விழிப்பும் அடைகின்றனர்.

இங்கே ஒன்றை யாரும் தெளிவாக விளங்கிக் கொள்வார்கள். 'நச்சுவாயு விவகாரம்' என்பது, புலனாய்வு விடயங்களிலிருந்து நோக்கக்கூடிய அம்சங்களை சிதைக்கவும், குழப்பவும் கூடிய வகை யில் *(as a distraction from the intelligence issues)* திட்டமிட்ட வகையில் நன்றாகக் கையாளப்படுகின்றது. ஏதோ அதன் மனிதாபிமான, மருத்துவ ரீதியான விவகாரங்களுக்கு ஊடாக அணுகப்பட்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, 'ஆடு நனைகிறது என ஓநாய் அழும்' கதையாக, சார்பு நிலையில் தளம்கொண்டுள்ள செய்தி ஊடகங்களால் 'செய்திப் பதப்படுத்தலுக்கு' உட்பட்ட விவகாரமாக மாறுகிறது.

ஆனால், விளாடிமிர் புட்டின் ஒன்றைத் தெளிவாக ஏற்கனவே சொல்லிவிட்டார். இவ்விவகாரத்தில் வெளிநாட்டுச் சக்திகளுக்கு நிறையவே தொடர்பிருக்கிறது என்பதே.

சரி, அவ்வாறானால் ஒரு கேள்வி எழுகிறது. செச்னிய விடுதலையில் நாட்டம் கொண்ட சக்திகளுக்கு அந்நோக்கத்துக்காகவே இஸ்லாமிய தீவிரவாத சக்திகள் உதவியதன் விளைவா இந்தப் பணய நாடகம்?




அன்றேல் செச்சினிய விடுதலையில் நாட்டம் கொண்ட சக்திகளை ரஷ்யாவை மேலும் பலவீனப்படுத்தி தனது காலடிக்குள் முடக்க முனையும் வேறு சக்திகள் பயன்படுத்தினவா? எல்லாம் கேள்விகளே எமக்கு. ஆனால், விளாடிமிர் புட்டினுக்கு அல்ல. ஏனெனில் 'மேய்ப்பனை மேய்க்க' முடியாதல்லவா? பணய நாடகத்தில் தொடர்புள்ளவர்கள் கைதாகி வருகிறார்கள். மர்மங்கள் துலங்கத் தொடங்குகின்றன. நாடகத்தின் 'மூலம்' எது என்பது புலனாகலாம்.

ஆனால், விளாடிமிர் புட்டின் கனவு காணும் உறுதியான ரஷ்யாவுக்கு ஒரு அபாயகரமான சவால் கருக்கொண்டு விட்டதாகவே தோன்றுகிறது. முளையிலே கிள்ளி எறியும் வல்லமை புட்டினுக்கு உள்ளதா?

## புவியரங்கன்

உண்மையில் புட்டின் ஒரு அவசர மனிதரல்ல. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரத்தில் கால அவகாசம் எடுத்து ஆழமாகவே யோசித்து முடிவு எடுப்பவர் ரஷ்ய அதிபர்.

2000 ஆம் ஆண்டு ஓகஸட் மாதம குர்ஸ்க் அணுவாயுத நீர்மூழ்கி விபத்துக்குள்ளாகி அமிழ்ந்தபோது - ரஷ்ய கடற்படையின் கவனயீனமாக அது விபரிக்கப்பட்டபோது - அதற்கு பொறுப்பானவர்களை பதவி விலக்கி தண்டிக்கும்படி பல அழுத்தங்கள் அவருக்கு ஏற்பட்டன. ஆனால், புட்டின் வெளிப்படையாக உடனடியாக எதுவுமே செய்யவில்லை. திரைமறைவில் ஆழமான விசாரணைகளை, புலனாய்வுகளை அவர் மேற்கொண்டார். அடுத்த சில மாதங்களுள் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் சிலர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.

மொஸ்கோ அரங்கின் பணய நாடகம் தொடர்பாக படைத்தளபதிகளையோ, புலனாய்வு அதிகாரிகளையோ, உள்நாட்டு விவகார அமைச்சரையோ போக்குவரத்துப் பொலிஸ் பிரிவுத் தலைவர்களையோ, மொஸ்கோவில் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரிகளையோ புட்டின் இன்னமும் பதவி நீக்கவில்லை.

அவர் அவசரப்படமாட்டார், கவனமாக ஆழமாக ஆராய்ந்து நாடகத்தின் 'மூல முழுமுதல்' எதுவென்று கண்டறிவார்.

உறுதி மிக்க ரஷ்யாவை உருவாக்கும் புட்டினின் கனவுடன் உலகின் எதிர்கால வரவாற்றுப் போக்கும் பின்னிப் பிணைந்துள்ளது

வரலாற்று இயங்கியலை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஆசிரியப் பணிக்கு அணிசேர்க்கும் பெண்களின் அன்பும் பொறுமையும்!

**பாடசாலைக் கடமைப் பொறுப்புக்களோடு வீட்டு நிர்வாகப் பொறுப்பும், இரட்டைச் சுமையாக மாறியும் சிரித்துக்கொண்டே பாடசாலையையும் வீட்டையும் சந்தோஷமான முறையில் நிர்வகிக்கும் ஆசிரியைகள் இருக்கிறார்கள். அந்த வகையில் உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்தின் ஆசிரியை குழாத்தின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி ஆர்.டேவிட் அவர்களது கருத்துகள் இன்றைய சமுதாயத்தின் யதார்த்த நிலையைக் காட்டு கின்றன.**

**கேள்வி:- நீங்கள் அறிந்தவகையில் ஆசிரியத் தொழில் சிறந்த தொழில் என்பதற்கு நீங்கள் யாது கூறுகிறீர்கள்?**



**பதில்:-** தொழில் என்பதைவிட இதையொரு "பணி" என்றே கொள்ளவேண்டும்.சமுதாய உருவாக்கத்தில் ஆசிரியத் தொழில் நேரடித் தாக்கத்தை உண்டு பண்ணுகிறது. அதாவது பணி என்னும் போது சம்பளத்தால் மட்டும் இப்பணியை மதிப்பிடமுடியாது. பலதரப்பட்ட மாணவர்கள் எமது கைகளுக்கூடாக எவ்வளவு தூரம் வளர்க்கப்பட்டு சமுதாயத்திற்கு ஏற்ற பிரஜைகளாக உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் கொண்டு தான் எமது பணி சிறப்பிக்கப்படுகிறது. அந்த வகையில் சமுதாயத்தில் ஒவ்வொருதுறைக்கும் தம்மை இட்டுச் செல்வதற்குரிய ஆயத்த நிலைகள் ஆசிரியப் பணிக்கு ஊடாக மட்டுமே ஆற்றப்பட்டு வருகிறது என்ற வகையில் எமது பணி மிகச் சிறந்தது என்றே கூற விரும்புகிறேன்.

**கேள்வி:- உங்களைப்பற்றி மாணவர்களும், சமூகமும் எவ்வாறு மதிப்பிடுகிறார்கள்?**

**பதில்:-** நேரம் தவறாமையும், வகுப்பறை வேலைகளில் பின்போடும் தன்மையின்றி - கற்றல், கற்பித்தல், மதிப்பீடு, மீள வலியுறுத்தலால் மாணவர்கள் எம்மீது நம்பிக்கை கொள்கிறார்கள். மாணவர்கள் தம்மீது அக்கறை கொள்ளும் ஆசிரியை என்பதைக் காட்டும்போது - எமக்கு அது ஆத்ம திருப்தியைத் தருகிறது.

**கேள்வி:- பெண்கள் ஆசிரியத் தொழிலில் அதிகமாக விரும்புகின்றார்களே. இது பற்றி உங்கள் கருத்து?**

**பதில்:-** பெண்கள் இயல்பாக அன்பு, பாசம், பண்பு, பொறுமை முதலிய ஆசிரிய இலட்சணங்கள் கூடுதலாக உடையவர்கள் என்ற வகையிலும், ஏனைய தொழில்களை விட ஆசிரியத்தொழில் பெண்களிற்கு பாதுகாப்பான தொழிலாக இருப்பதுடன் வீட்டு நிர்வாகத்தையும் கவனிக்கக்கூடிய நிலையில் நேரம், விடுமுறை என்பன கிடைக்கிறது. அதாவது குறிப்பிட்ட நேரத்துடன் கடமை முடித்துச் செல்லவும், வீட்டில் பிள்ளைகளுக்கு வேண்டிய கற்பித்தற் செயற்பாட்டில் கூடியளவு பங்கெடுத்துக்கொள்வதால் அவர்களை முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச் செல்ல முடிவதனாலும் - பெண்கள் கூடிய அளவில் ஆசிரியப் பணியைப் புரியவே விரும்புகிறார்கள். உண்மையில் ஏனைய தொழில்களைவிட பெண்களைப் பொறுத்தவரையில் ஆசிரியத் தொழில்தான் சிறந்தது என்று தான் நான் கூறுவேன்.

## ஆசிரியத் தொழில் பற்றிய அனுபவப் பார்வை!

**கேள்வி:- மாணவர்களது கவனம் கலையாமல் கற்பிப்பதில் வெற்றி கண்டுள்ளீர்களா?**

**பதில்:-** ஆம். வகுப்பு ஆரம்பமாகி முடியும்வரை அவர்களுக்கு கற்றல் என்பது ஒரு சுமையாக இல்லாது, மகிழ்ச்சி ஊட்டும் தன்மையில் பாடங்களை கற்பித்துக்கொள்ளும் திறனினால் வெற்றி கண்டுள்ளேன்.

**கேள்வி:- பெற்றோரைவிட மாணவர்கள் ஆசிரியர்கள் மீது அதிகமான மதிப்பு வைத்திருப்பது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

**பதில்:-** தனது உருவாக்கத்திற்கு ஆசிரியருடைய பங்கு, பணி கூடுதலாக உதவியது என்பது மாணவர்கள் உணரும்போது நிச்சயமாக பெற்றோரைவிட ஆசிரியர்கள் மீது அதிக நம்பிக்கையும் மதிப்பும் ஏற்படுகின்றது. தற்போது வெளிநாடுகளுக்கு சென்றவர்களில் கூட அதிகமானோர் தாம் கற்ற பாடசாலையையும் தம்மை உருவாக்கிய ஆசிரியர்களையும் மறக்காது மதித்து வருகிறார்கள்.

**கேள்வி:- மாணவர்கள் சில ஆசிரியர்களை வெறுக்கிறார்களே அது உண்மையா? இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்.**

**பதில்:-** ஆளுமைக் குறைவுடைய ஆசிரியர்கள், மாணவர்களுடைய கல்வியில் அக்கறை குறைவுடைய ஆசிரியர்களை மாணவர்கள் மதிப்பார்களா என்பது சொல்லாமலே தெரியவேண்டும்.

**கேள்வி:- கணிப்பீடு சம்பந்தமாக உங்களுடைய கருத்து என்ன?**

**பதில்:-** குறிப்பிட்ட விடய அலகை செயல்மூலம் கற்கும் பொழுது அது உறுதியானதாக அமைகிறது. அவர்களுடைய தொடர் மதிப்பீட்டிற்கும் பாடத்தின் முழுமையான அறிவைப் பெறுவதற்கும் இக் கணிப்பீட்டு முறை பெரிதும் உதவியாக அமைகிறது. சில சமயங்களில் பெற்றோருக்கு அதிக சுமையாகவும் இதன் பெரும் பகுதியை அவர்களே செய்வதாகவும் தொனிக்கிறது.

**கேள்வி:- மாணவர்கள் எப்போது தமது ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மீறுவார்கள்?**

**பதில்:-** மாணவர்களது புறச் சூழ்நிலைகள் விருப்பு வெறுப்புகளுக்கு அவர்களை இட்டுச்செல்லும். உளவியல் ரீதியான உண்மை ஒன்றினைக் கூற விரும்புகிறேன். "ஒரு மாணவனுடைய பாதுகாப்பு பறிபோகும்போது அவன் தனது பொறுப்புக்களை உணர மறுக்கிறான்." படித்தும் வேலை இல்லை என்றால் அவனுடைய மனம் என்ன செய்யும். 1971 இல் இளைஞர் கிளர்ச்சி இந்த நிலைமைக்கு நல்ல உதாரணமாகும். இன்றும் அந்த நிலைமைகள் மாறி இருக்கின்றது என்று கூற முடியாது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் காணும் இழுத்தடிப்பு இதற்கு சான்றாகும். இனிப் பாதுகாப்பு பறிபோகிறது, என்ற விடயத்தை யதார்த்த சூழ்நிலையில் பார்க்க வேண்டும். இராணுவ நடவடிக்கையினால் பல்கலைக்கழக மாணவர்கள் தொடக்கம் எத்தனையோ மாணவர்கள் பாதுகாப்பு இன்மையினால் தான் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றார்கள். பாடசாலைகளில் கூட வழங்கப்படும் தண்டனைகள் சில, மாணவர்களை மன உளைச்சல்களுக்கு ஆளாக்கும்போதும் தமது ஒழுங்கு கட்டுப்பாடுகளை மீறவே செய்கிறார்கள்.

**கேள்வி:- கல்வித்துறையில் அண்மைக்கால மாற்றங்கள் உங்களுக்கு வேலைப்பழுவைக் கூட்டி உள்ளதாக நினைக்கிறீர்களா?**

**பதில்:-** ஆம்.ஆசிரிய உலகம் இன்று இயந்திரமாக இயங்க வேண்டியுள்ளது. காலை 4.00 மணிக்கு எழுந்து வீட்டு நிர்வாக வேலைகளைக் கவனிக்கவேண்டும். பாடசாலைக்குச் சென்றால் தொடர் மதிப்பீடு, கணிப்பீடு, கற்பித்தல் வேலைப் பொறுப்புக்களை விட நாளாந்தம் குவிந்தவண்ணம் வரும் படிவங்கள் நிரப்புதல் இவை எல்லாம் சேர்ந்தே பாடசாலைச் சுமையும், வீட்டுச் சுமையும் "இரட்டைச் சுமையாக"த் தற்போதைய நிலை காணப்படுகிறது.

● **நேர்காணல்- கலா**




## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






*அன்புள்ள சிந்திக்கு*

*சிந்தி,*

*சித்திக்கவைக்கும் உனது மடல் கிடைக்கப் பெற்றேன். நமது கலாசாரம், குடும்ப அமைப்பு ஆகியவற்றினின்று பிறழாது நாம் இருந்து கொண்டே நாம் பல கட்டுக்களை அறுத்தெறிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தாய்! உண்மை!. அந்த அவசியத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.*

*கட்டுகளை அறுத்தெறிய வலிமையையும் நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது சில பலவீனங்களை முதலிலே வேரறுக்க முற்படவேண்டும்.*

*'சில பெண்கள் சேர்ந்தால் நகைகளைப்பற்றியும், உடைகளைப் பற்றியும் அதிகமாகக் கதைப்பவர்கள்' என்றொரு அபிப்பிராயம் நிலவுகிறது. இதை முழுமையாக மறுக்க முடியாதென்றே எனக்கும் தோன்றுகிறது.*

*சிந்தி, ஏன் அப்படி? பெண்கள் வகைவகையாக அணிகலன்களையும் விதம்விதமான உடைகளையும் அணிவதுதான் அதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.*

*அழகுபடுத்தும் ஆசை மனிதர் அனைவருக்கும் இருக்கிறது. விதம்விதமான மோதிரங்கள், கைச்சங்கிலி, கழுத்தில் சங்கிலி என்பனவற்றை ஆண்களும் அணிகிறார்கள். ஆனால் அதிகமாக பல அணிகலன்களை அணியும் பழக்கத்தைப் பெண்களிடையே ஏற்படுத்தியதாலேயே இந்த ஈடுபாடு பெண்களுக்கு அதிகமேற்பட்டு விட்டது. குழந்தைப் பருவம் முதலே பெண்குழந்தைக்கு இந்த நாட்டம் ஏற்படுத்தப்படுகிறது.*

*சிந்தி, வீட்டிலுள்ள அணிகலன்களை பெண்குழந்தைக்குத் தான் அணிவித்து அழகு பார்க்கிறார்கள். தம்மிடமுள்ள நகைகள் பெண்குழந்தைக்கு உரியது என்ற எண்ணம் அவர்களின் மனங்களிலே அந்தக் குழந்தைப் பருவத்திலேயே ஊட்டப்படுகிறது. இதனாலேயே வளர்ந்ததும் அவர்களது நாட்டம் இவ்வாறு அமைகிறது.எனவே எமது பெண்குழந்தைகளை வளர்க்கும் போது இந்த நகை ஆசையை ஊட்டாமல் நாம் வளர்க்க வேண்டும்.*

*நான் முன்னைய கடிதமொன்றில் ஒரு விடயத்தை வலியுறுத்தியுள்ளேன். நாம் குழந்தைகளை வளர்க்கும் போது கவனத்துடன் வளர்த்தாலும் சூழ்நிலை, நட்பு போன்றவை வளர்ந்தபின் அவர்களை மாற்றிவிடுவதைக் காண்கிறோம். நகை, உடை, ஆடம்பர வாழ்க்கை என்பவற்றில் அவர்கள் வளர்ந்த பின்பும் சூழ்நிலையால் ஈடுபாடு ஏற்பட வாய்ப்புண்டு.*

*சாதாரண மனிதர்களுக்கேயுரிய அலங்காரப் பிரியத்தை விட, அதிகமான அலங்கார மோகம் பெண்களுக்குக் கிடையாது என்ற ஒரு நிலையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். இது மிகச் சுலபமான ஒன்றென்றே நான் கருதுகிறேன்.*

*இயல்பாக எந்தப் பெண்ணுக்கும் அலங்கார மோகம் கிடையாது. அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணமே உண்டு.*

*ஆடை அணிகலன்களை விற்பனை செய்வோரின் விளம்பரம், திரைப்படம் போன்றவை பெண்களை நகைகளின் சுமை தாங்கியாகக் காட்ட, அதன் ஈர்ப்பினால் ஏற்பட்ட மோகமே இது. எளிமையான அலங்காரமே நவநாகரீகம் என்ற நிலையை உருவாக்கிவிட்டால் இந்த நிலை இலகுவாக மாறிவிடும். அதிகமாக நகைகளை அடுக்கி, பளபளக்கும் உடையில் வருபவர்கள் முற்போக்கு சிந்தனையற்றவர்கள. செம்மறியாட்டு மந்தை போன்றவர்கள் என்ற கருத்து ஏற்படுத்தப்பட வேண்டும்.*

*பெண்கள் சேர்ந்தால் அரசியல், பொதுவிடயங்கள், தமது தொழில் சார்ந்த விடயங்களை அலசி ஆராயும் நிலை ஏற்பட வேண்டும்.*

*சிந்தி, உன் சிந்தனைகளையும் சேர்த்து நாம் செயற்பட ஆரம்பிக்கலாம்.*

*அன்புடன்*
*யோசி*



## இவற்றுக்கு நேரத்தைச் செலவிடு

- **அன்பு காட்ட நேரத்தை எடுத்து கொள். அது சாதனைக்கு வழி !**
- **சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள. அது சக்தியின் ஊற்று !**
- **படிக்க நேரத்தை எடுத்துக்கொள். அது அறிவின் வாயில் !**
- **உழைக்க நேரத்தை எடுத்துக்கொள். அது வெற்றியின் விலை !**
- **சேவை புரிய நேரத்தை எடுத்து கொள். அது இதயத்தின் இன்னிசை !**

T. நாகம்மா
பருத்தித்துறை.

# கவிதைச்சோலை

## எதிர்காலம் உன்னோடு



எதிர்காலம் உன்னோடு
என்சிநேகிதியே,
என்ன முடங்கி விட்டாய்?
எழுந்து வா
எதிர்காலம் உன்னோடு

தடைக்கு நீ விலங்கிடு
தரணியில் துலங்கிடு
உனக்கு நீ பலங்கொடு
உலகுக்கு உயிர் கொடு

பழமைகளை உதிர்த்துவிடு
புதுமைகளை துளிர்க்க விடு
விழிகளில் பொறியோடு
வீழும் வரை போராடு

காற்றோடு கவிபாடு
புயலோடு உறவாடு
சரித்திர நூலோடு!
எழுதட்டு முன் வரலாறு

குயிலிசையில் மயங்கு
பூக்களோடு புன்னகை
கடலோடு கதைபேசு
ஏன் தெரியுமா?
இன்று மட்டுமல்ல
நாளையும் உனக்காகத்தான்

- விஜயா பிரான்சிஸ்.
யாழ்ப்பாணம்.

## எண்ணிப்பார் என் தோழி!

புது உயிரைக் காத்து
உலகிற்(கு) அளிக்கும்
உத்தமியுனக்கு
சுதந்திர
உரிமையில்லையா.. ?

ஒரு சட்டம் போட்டு
உன்
உணர்வைத் தடுக்க
நீயும்
ஒடுங்கிப் போவதா...?

பூமி உயிர்க்க
மழையைச் சொரியும்
வானப் பெண்ணும்
முழங்கித் தானே
மழையைத் தருகிறாள்



உலகை இயக்கும்
ஆக்க
சக்தி நீயும்
மௌனம் கொள்வது
ஏன்தோழி.....?

மலரினம் என்றும்
மானினம் என்றும்
பித்தம் ஏறிக்
கவிஞர்
பிதற்றிய வகையால்
மெல்லினம் என்ன
இருந்தாயோ...
இன்று
பூவினம் களத்தில்
புதுச்
சரித்திரம் படைப்பதறியாயோ ?

உறங்கிக் கிடப்பது
வீண் தோழி~ புதுச்
சிறகுகள் கட்டிப்
பறதோழி ~ மண்ணில்
பிறக்கில் பெண்ணாய்
பிறத்தல் நன்றென
மற்றவர் ஏங்கச்
செய் தோழி !

என். காயத்திரி
கொக்குவில்

## எப்பொழுதும் காதல்!



நீ என்னை அறிவதை விட
நான் வார்த்தைகளால் சொல்வதை விட
நீ என்னுடைய மனதிலும் என்
இதயத்திலும் என்றும் இருக்கின்றாய்.
நீ என்னுடைய வாழ்க்கையில்
மகிழ்ச்சியைத் தருகிறாய்
நீ எப்பொழுதும் என்னுடைய கனவில்
இருக்கிறாய்.
உன்னுடன் இருப்பதை விட
எனக்கு பெரிய மகிழ்ச்சியில்லை.
நீ எப்பொழுதும் என்னைச் சுமக்கிறாய்
அதற்காக என்றும் எப்பொழுதும்
உன்னைப் பிரியாது காதல்!



- சு.சுகந்தினி

# முக அழகைப் பாதுகாப்பது எப்படி?



உங்கள் இளமை ஒளி விட எத்தனையோ வழிமுறைகள் உண்டு என்றாலும் சிறந்த வழி முறை தோலைப் பாதுகாப்பது தான். அழகுக் குறிப்புக்களைப் படித்து விட்டு ஏதாவதொரு செயற்கை ஒப்பனைப் பொருளை பயன்படுத்தாதீர்கள். முதலில் உங்கள் தோல் வகை என்ன என்பதைக் கண்டறியுங்கள். அதைப் பொறுத்து எந்த விதமான ஒப்பனைப் பொருளைப் பயன்படுத்துவது எனத் தீர்மானியுங்கள்.

முகப்பருத் தொல்லை உடையவர்கள் நாளில் மூன்று முறையாவது குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவித் தூய்மை செய்ய வேண்டும். இரவு படுப்பதற்கு முன் கொதிக்க விடாத பசுப்பால் கொண்டு முகத்தை மெதுவாக மசாஜ் செய்யவும், வாரம் ஒரு முறை வீட்டிலேயே நீராவி பிடிப்பதன் மூலமும் தோலில் உள்ள துளைகளைத் தூய்மை செய்யலாம்.

இதை விட சாதிக்காய் ஒரு தேக்கரண்டி, வேப்பிலை ஒரு தேக்கரண்டி இவற்றைப் பன்னீரில் நன்கு அரைத்து கஸ்தூரி மஞ்சள் பொடி ஒரு தேக்கரண்டி, சந்தனம் ஒரு தேக்கரண்டி, தயிர் ஒரு தேக்கரண்டி கலந்து நன்றாகக் குழைத்து முகப் பூச்சாக பயன்படுத்தலாம்.

இந்தப் பூச்சை நாள்தோறுங்கூட பயன்படுத்தலாம். பருக்கள் குறையும். பருவினால் உண்டான கரும்புள்ளிகள் படிப்படியாக மாறும். பூச்சு போட்டிருக்கும்போது பேசவோ, சிரிக்கவோ கூடாது . 20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவி விடவும்.

வறண்ட மென்மையான தோல் உள்ளவர்களுக்கு சரியாகக் கவனிக்காவிடில் முகத்தில் சுருக்கம் விழும். வறண்ட தோலுள்ளவர்களுக்கு எண்ணெய்ச் சுரப்பிகள் குறைவாக இருப்பதால் தோலிலுள்ள நுண்துளைகள் அடைபட்டு இருக்கும். இதனால் பகலில் நல்லதொரு ஈரப்பதன் துணியினால் முகத்தினைத் துடைக்க வேண்டும். அடிக்கடி சோப் போட்டு முகத்தைக் கழுவக் கூடாது.



ஒலிவ் எண்ணெய் அல்லது விட்டமின் ஈ எண்ணெய் கொண்டு முகத்தை மசாஜ் செய்யவும். முட்டையின் வெள்ளைக்கரு 1 தேக்கரண்டி, எலுமிச்சை சாறு 2 தேக்கரண்டி அனைத்தையும் நன்றாகக் கலந்து பூச்சு போட்டுக் கொள்ளவும். அது காயும்வரை பேசவோ, சிரிக்கவோ கூடாது. அரை மணி நேரம் கழித்து கழுவி விடலாம்.

இவ்வகைத் தோல் தொல்லையுண்டாக்குவதில்லை என்றாலும் கவனிப்பும் பாதுகாப்பும் தேவைதான். வெளியில் செல்லுமுன் கண்டிப்பாக ஈரப்பதமூட்டிய துணியினால் தடவுங்கள். தயிர் அல்லது பால் கொண்டு முகத்தை தூய்மை செய்யுங்கள். சில நிமிடங்கள் கழித்துக் கழுவி விடவும்.

# துணியில் பூச் செய்யும் முன் கஞ்சியிடும் முறை



தெரிவு செய்த $^1/_2$ m பப்பிளின் துணிக்கு 2 மேசைக் கரண்டி சவ்வரிசி அல்லது 2 மேசைக்கரண்டி **cone flower** ஐ ஒரு ரம்ளர் தண்ணீரில் கரைத்து எடுத்து, (சவ்வரிசி எனின் ஊற விட்டு கரைத்து எடுத்து வடிக்க வேண்டும்) அடுப்பில் வைத்து காய்ச்சவும். பின் தடிப்பான பதம் வந்ததும் இறக்கி ஆற வைத்தபின் தெரிவு செய்த துணியை மெழுகுசீலை அல்லது பொலித்தீன் மேல் சுருக்கங்கள் இன்றி விரித்துக் கலவையை விரித்த பக்கம் முழு பகுதிக்கும் அழுத்திப் பூசுதல் வேண்டும். பின் பொலித்தீனில் இருந்து துணியை எடுத்து வெயிலில் உலர விட வேண்டும். மடித்துப் போடக் கூடாது.

## கோன்அலரி (Butter cups)

*தேவையான பொருட்கள்*

கஞ்சியிடப்பட்ட பப்பிளின் துணி - மஞ்சள், பச்சை
பஞ்சு
கட்டுக்கம்பிகள்
ரிசு பேப்பர் -மஞ்சள்
**flower tape**
பைண்டர் கம்

*செய்யும் முறை-*

முதலில் இதழ் மாதிரி உருவை(**cutting**) ஐ கஞ்சியிடப்பட்ட மஞ்சள் பப்பிளின் துணியில் வைத்து ஐந்து இதழ்களை வெட்டி எடுக்கவும். பின்பு 5 கட்டுக்கம்பிகளுக்கு ரிசு சுற்றி, ஒவ்வொரு இதழ்களுடனும் சேர்த்து ஒட்டவும். அதன் பின் ஒவ்வொன்றாகச் சேர்த்து, அதாவது பக்கங்களின் நுனியுடன் ஒட்டவும் . அதன் ஐந்து இதழ்களையும் பூ வடிவில் ஒட்டியபின், மொட்டு செய்வதாயின் கம்பிக்கு ரிசு சுற்றுதல் வேண்டும். பின் ஒரு இதழினுள் பஞ்சை வைத்து ஒட்டி, பின் மொட்டின் கீழ் புல்லி வைத்து ஒட்டுதல் வேண்டும். கம்பி முழுவதும் **flower tape** சுற்றுதல் வேண்டும் இவை செய்வதாயின் இலை **cutting** ஐ வைத்து பச்சைத் துணியில் வெட்டி கம்பி க்கு **flower tape** சுற்றியபின் பின் கைக்குட்டையில் றூள் செய்யவும். இறுதியில் மொட்டு, பூ இலை ஆகியவற்றை ஓர் ஒழுங்கு ரீதியில் ஒழுங்குபடுத்தவும். பார்த்தீர்களா? நீங்களும் அழகான பூவொன்றை உருவாக்கிவிட்டீர்களே!

# மரக்கறி சூப்




சுவைத்துச் சாப்பிட சுவையோ சுவை!

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| வெங்காயம் | - 100g |
| கரட் | - 100g |
| லீக்ஸ் | - 100g |
| தக்காளி | - 100g |
| உருளைக்கிழங்கு | - 100g |
| பருப்பு | - 100g |
| உள்ளி | - 5 பற்கள் மிளகு தூள் 5 தேக்கரண்டி |
| தேசிக்காய் | - 1 |
| தண்ணீர் | - 2 போத்தல் அல்லது 8 ரம்ளர் |
| உப்பு | - சிறிதளவு |



செய்முறை:-

வெங்காயம், கரட், லீக்ஸ், தக்காளி, உருளைக்கழங்கு, கறிவேப்பிலை, உள்ளி என்பவற்றை சுத்தம் செய்து, கழுவி சிறிதாக வெட்டி ஒரு பாத்திரத்தினுள் இடவும். பருப்பினைக் கழுவி அதற்குள் 8 ரம்ளர் தண்ணீர் விட்டு அவியவிடவும். பின் மரக்கறிகளுடன் உப்பு சேர்த்து அவிய விடவும். எல்லாம் நன்றாக அவிந்ததும், இறக்கும் போது சிறிது மிளகுத் தூள், தேசிப்புளி சேர்க்கவும். பின் நன்றாகக் கிளறி வடித்தெடுத்து மரக்கறிகளை மசித்துக் கொள்ளவும். பின் வடித்து சுடச் சுடப் பரிமாறலாம். சாப்பிட முன் குடித்தல் நன்று.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

முடிவும் இடையூறும் முற்றிய ஆங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். - திருக்குறள்

## நமது நோக்கு

# நிதானம் வேண்டும்!

தாய்லாந்தில் நேற்று இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியது போல, மகிழ்ச்சியான சகுனமாக ஆரம்பமாகியுள்ளன.

பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னர் - தாய்லாந்தில் வைத்துச் செய்தியாளர்களுடன் பேசிய விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - போருக்கு முடிவு காணவே தாம் விரும்புவதாகக் கூறியுள்ளார்.

அதேவேளை - முஸ்லிம்களைப் புறந்தள்ளிவிட்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியாதென்றும், இவ்வாறு அவர்களைப் புறந்தள்ளிவிட்டுத் தீர்வு காணும் நோக்கமெதுவும் தமக்கோ, அரச தரப்புக்கோ இல்லை என்றும் அவர் - தாய்லாந்திற்குச் செல்லும் விமானத்தில் வைத்து பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இருதரப்பினரதும் இந்த அறிவிப்புக்கள் - இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகு முன்னரேயே இருதரப்பிலிருந்தும் எழும் நம்பிக்கையும், அமைதி முயற்சிகளின் மீதான அர்ப்பணிப்பையும் தெளிவாகக் காட்டுகின்றன.

குறிப்பாக - விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் - அறிவித்துள்ள இரண்டு விடயங்களும், சமாதான முயற்சிகளில் புலிகள் கொண்டுள்ள விசுவாசத்தையும், தெளிவையும் உறுதியாக எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன.

போரினை முடிவுக்குக் கொண்டுவரும் விருப்பத்தை விடுதலைப்புலிகள் தரப்பு மீண்டும் வலியுறுத்தியுள்ளமையானது - தெற்கில் - சமாதானப் பேச்சுக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வரும் பொய்க் கருத்துக்களின் முகத்திரைகளைக் கிழிப்பதாயுள்ளது.

அதேவேளை - கடந்த சில நாட்களாக கிழக்கிலும், தெற்கிலும் பெருமளவில் சர்ச்சைகளைத் தோற்றுவித்துவரும் - முஸ்லிம் மக்களின் எதிர்காலம் பற்றிய பல கருத்துக்களுக்கும், வாதப் பிரதிவாதங்களுக்கும் - விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து வெளியாகியிருக்கும் பதிலானது - அரசியல் யதார்த்தத்தைப் புரிய வைக்கப் போதுமானதாக அமைந்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் தரப்பிலிருந்து எழுந்த குழப்பகரமான பார்வைகளும், வேண்டுமென்றே சிலரால் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களும் - தோற்றுவித்த, தேவையற்ற பதற்றமான சூழலைத் தணித்து உண்மை நிலையைத் தெளிவாக்குவதாக, அன்ரன் பாலசிங்கத்தின் கருத்து அமைந்திருக்கிறது.

பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக்கட்டத்தில் நிற்கிறோம். ஆரம்பக்கட்டத்தி லேயே அவசரப்பட்டு நிபந்தனைகள் போட்டுப் பேச்சுக்களுக்கு பாதக நிலைமைகளைத் தோற்றுவிக்க முஸ்லிம் பிரதிநிதிகள் முனையமாட்டார்கள் என்று - புலிகள் தரப்பிலிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ள நம்பிக்கையை ஏற்று, அதற்குக் குந்தகம் விளைவிக்காது - முஸ்லிம் தலைவர்கள் செயற்படவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லற்படுகையில், முற்றுமுழுதான இயல்புநிலை இன்னமும் சரிவரத்திரும்பாத பட்சத்தில், இராணுவப் பிரசன்னம் எங்கும் தளர்வுகளின்றி நீக்கமற நிறைந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பமுடியாது தவிக்கும் நிலையில், எமது பிரதேசக் கடலில் தொழிலாற்ற எமக்கே தடைகள் தொடரும் நிலையில் -

இவற்றையெல்லாம் தீர்க்க வேண்டிய பாரிய பணிகள் எதிர்நிற்கின்ற வேளையில் - அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருக்கும் சூழலில் - அவசரப்பட்டு நிபந்தனைகள் விதிப்பதும், அமைதி முயற்சிகளை பாதிக்கும் விதமாகக் கருத்துக்களை வெளியிடுவதும்-

'நந்தவனத்தில் ஓர்ஆண்டி, நாலாறு மாதமாய்த் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி, கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி' - என்பதையே நினைவுபடுத்துகின்றது.

எனவே அவசரப்படாது, வடக்கு-கிழக்கில் எட்டப்படும் எந்தவொரு தீர்விலும் முஸ்லிம் மக்களது நலன்கள் நிச்சயம் கவனிக்கப்படும் எனும் விடுதலைப்புலிகளின் வாக்குறுதியை ஏற்று, அமைதி முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பைத் தர முஸ்லிம் தலைவர்கள் முன்வரவேண்டும். அதுவே முஸ்லிம் சமூகத்திற்கு நிரந்தர அமைதியையும் தகுந்த தீர்வையும் பெற்றுத்தரக்கூடியதாக இருக்கும்.

# தடுத்து நிறுத்திய படையினர் மீது சிறப்புரிமை மீறல் வழக்குத்தாக்கல்!

## சட்டத்தரணிகளுடன் ஆராய்வதாக கிருஷ்ணபிள்ளை எம்.பி.

(நமது நிருபர்)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குச் சென்றபோது படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டமைக்கு எதிராக தான் சிறப்புரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்யப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

இதுதொடர்பாக 'நமது ஈழநாடு' க்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

மட்டக்களப்புக் கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்துக்குச் சென்ற போது தான் 24 நிமிடங்கள் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார். இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் ஜோன் அமரதுங்க, இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, சட்டமா அதிபர் மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரிடமும் முறைப்பாடுகளைச் செய்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆனால் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மட்டுமே இதற்கு தொலைபேசி மூலம் பதிலளித்ததாகக் கூறிய கிருஷ்ணபிள்ளை, மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு 5ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை தர வேண்டும் என இராணுவத் தளபதிக்குப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டுள்ள தகவலை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தனக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, மேற்படி சம்பவம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையை மீறும் செயலாகும். இதனால் சிறப்புரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வது தொடர்பாகத் தான் சட்டத்தரணிகளுடன் ஆராய்ந்து வருவதாகவும் கிருஷ்ணபிள்ளை எம்.பி. தெரிவித்தார்.

## லயன் சர்வதேசத் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி மாவட்டத் தலைவர் லயன் ஒறீகன் பிங்கி, லயன் சீமாட்டி டாக்டர் றெபேக்காவுடன் வருடாந்த விஜயமொன்றை மேற்கொண்டு 29ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

செயலாளர் பொனிபொல் பெர்ணான்டோ சகிதம் வருகை தந்துள்ள இவர்கள், குடாநாட்டிலுள்ள 14 லயன்ஸ் கழகங்களிற்கும் விஜயம்செய்து, அவற்றின் செயற்திட்டங்கள் பற்றி கலந்துரையாடல்கள் நடத்தியதோடு, கழகங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழி காட்டல்களையும் வழங்கினர்.

இக் குழுவினர் இன்று கொழும்பு திரும்பவுள்ளதாக நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி.எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

# நாகர் கோவில் பகுதிகளைப் பார்வையிட பத்துப் பேர் கொண்ட குழுவுக்கு அனுமதி

(வடமராட்சி கிழக்கு)

யாழ்.செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மீளக் குடியேற்றம் சம்பந்தமான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி படையினர் நாகர்கோவிலுள்ள 10 குடும்பத்தலைவர்களை வீடுகளைப் பார்வையிடக் கூட்டிச்சென்றனர்.

இவர்கள நேற்றுமுன்தினம் காலை, குடத்தனைக்கு அழைக்கப்பட்டு, மீளக்குடியமர்வுக் குழுதலைவர் க.ஆனந்தமூர்த்தி தலைமையில், நாகர்கோவில் படைமுகாம் பொறுப்பதிகாரியினால், இராணுவ வாகனத்தில் நாகர்கோவில் சந்தி ஊடாக கடற்கரைவரை, வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சந்தியிலிருந்து கடற்கரைவரை, பாரிய இராணுவப் பாதுகாப்பு மண்அணை போடப்பட்டுள்ளதாகவும் - நாகர்கோவில் கிழக்கு புறமாக மீளக்குடியமர முடியாது எனவும், மேற்குபக்கமாக மாத்திரம் மீளக்குடியேறக் கூடியதாகவும் இருக்கிறது எனவும், இராணுவம் நிலை கொண்டுள்ள 5 வீடுகள் மாத்திரம் சேதமடையாது இருப்பதாகவும், பயன்தருமரங்கள் யாவும் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று வந்தவர்கள் தெரிவித்தனர். நாகர் கோவில் மகாவித்தியாலயம் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் நாகதம்பிரான் ஆலயம், கௌதந்துறை பிள்ளையார் ஆலயம், தேவாலயம் என்பன சேதமடையவில்லை எனவும் தெரிவித்தனர்.

இவர்கள் தமது காணிக்குள் செல்லவோ வாகனத்திலிருந்து இறங்கவோ அனுமதிக்கப்படவில்லை. மிதிவெடிகள் இருப்பதாக அதற்குக் காரணம் தெரிவிக்கப்பட்டது. ஏற்றிச்செல்லப்பட்ட 10 பேரும் மீண்டும் குடத்தனைச் சந்தியில் கொண்டு வந்து விடப்பட்டனர். (17)

## மாளிகாவத்தைப் பகுதியில் விசேட பாதுகாப்புத் திட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் பின்னர் விசேட பாதுகாப்புத திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

பொலிசார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும், அது பூர்த்தியானதும் அசம்பாவிதங்களுக்கு என்ன காரணம் என்று கண்டறிவதற்குக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். குழப்பநிலையைத் தோற்றுவித்ததாகக் கருதப்படும் 50 பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். பொலிஸ் ஊரடங்குச்சட்டம் நேற்றுக்காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டது.

## பளுகாமத்தில் மீண்டும் காவல்துறை பணிமனை

(கல்முனை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீண்டும் தமிழீழக் காவல்துறை செயற்படவுள்ளதாக விடுதலைப்புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். பளுகாமத்தில் அமையவுள்ள காவல்துறை பணிமனை எதிர்வரும் 5 ஆம் திகதி திறந்துவைக்கப்படும் எனவும் கௌசல்யன் மேலும் தெரிவித்தார்.

# காஞ்சிரங்குடா முகாமருகே இரு கடைகள் நள்ளிரவில் மர்மமான முறையில் தீக்கிரை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமுக்கு அண்மையில் உள்ள இரண்டு கடைகள் தீக்கிரையாகியுள்ளன. இக்கடைகள் எவ்வாறு தீப்பிடித்தன என்பது மர்மமாகவே உள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டு கடைகளும் முற்றாக நாசமானதாகவும், இதனால் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடைகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, நீளக் காற்சட்டை அணிந்த சுமார் பத்துப்பேர் வீதியால் சென்று கொண்டிருந்ததைத் தாம் அவதானித்ததாக கடையொன்றின் உரிமையாளரான கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடை உரிமையாளர்களை காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் அவ்வப்போது மிரட்டி வந்ததாகவும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இச்சம்பவம் தொடர்பாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு பொலிசாரிடமும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் முறையிட்டதையடுத்து கண்காணிப்புக் குழுவினர் அவ்விடத்தைச் சென்று பார்வையிட்டனர். பொலிஸ் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (08)

# அம்பாறை முஸ்லிம் பிரமுகர் வீடு மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம்!

## - வழக்கு விவகாரமே காரணமாம் -

(கல்முனையிலிருந்து சலீம்)

நிந்தவூரில் சட்டத்தரணியும் எழுத்தாளருமான எல்.முத்துமீரானின் இல்லத்தின் மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் சட்டத்தரணி முத்துமீரான் தனது வீட்டின் மேல்மாடியில் வழக்கு ஒன்று தொடர்பான ஆவணங்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோதே அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

எனினும் அவருக்கு எந்தக்காயமும் ஏற்படவில்லை. வீட்டுச் சுவரில் நான்கு துப்பாக்கிச் சன்னங்கள் காணப்பட்டன. உடனடியாக சட்டத்தரணி முத்துமீரான் வெளியே வந்து பார்த்தபோது முகமூடியணிந்த இரு நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதைப்பார்த்ததாக சட்டத்தரணி முத்துமீரான் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு எந்த அரசியல் பிரச்சினையும் காரணமல்ல என்றும், தான் நீதிமன்றத்தில் ஆஜராகும் வழக்கு தொடர்பாக அதிருப்தி கொண்டவர்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனவும் முத்துமீரான் தெரிவித்தார். இது தொடர்பாக கல்முனை பொலிஸ் அத்தியட்சகர் நெவில், மோசஸின் உத்தரவின் பேரில் சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# மக்கள் உரிமைக்காகக் குரலெழுப்பிய கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்!

**❑ கேள்வி:- கிழக்கிலங்கைச் செய்தியாளர்களின் இன்றைய நிலைப்பாடு பற்றியும் அதனுடைய வளர்ச்சிப் போக்கு, செயற்பாடுகள் பற்றியும் கூறுங்கள்?**

**❑ பதில்:-** தற்போது நான் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் தலைவராக இருக்கின்றேன். 1980 ஆம்ஆண்டு கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. அன்றைய சூழலில் இலங்கையில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் மட்டுமே ஊடகவியலாளருக்கான ஒரு சங்கமாக இருந்தது. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், பிராந்தியப் பத்திரிகையாளர் சங்க நலன்களையோ, தமிழ்ப் பத்திரிகையாளர் சங்க நலன்களையோ, பேண நடவடிக்கை எடுக்கவில்லை. 1980 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வடக்கு-கிழக்கின் யுத்தம் ஆரம்பமாகிய சூழல், அக்காலகட்டத்தில் நெருக்கடி மிகுந்திருந்த வேளையில், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் எந்தவித கரிசனையும் அற்ற நிலையில் தான் செயற்பட்டார்கள்.




கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் முக்கியமான நோக்கம் பிராந்தியப் பத்திரிகையாளர் நலன் காப்பு, பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கருத்தில்கொள்வது என்றவாறாக இருந்தது. 1985ஆம் ஆண்டில் யுத்தம் தீவிரமாகக் காணப்பட்டபோது இரண்டு வருடங்கள் சங்கத்தினது செயற்பாடுகள் இல்லாமல் போனது. இதனால் நாம் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். இருந்தாலும்கூட, எமது வெளிப்படையான செயற்பாடுகளை 1987 வரைக்கும் படையினரின் நெருக்குதல்களுக்குள் செய்ய வேண்டியிருந்தது.

1992ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பத்திரிகையாளரான சலீம் தலைவராகவும் நான் செயலாளராகவும் இருந்தோம். அதன் பின்னர் சில வருடங்களில் பத்திரிகையாளர் சங்கத்தின், தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலைக்கு நான் ஆளானேன். அதன் பின்னர் 1985-1986 இற்குப் பின்னர் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், தொடர்ச்சியாக இடம்பெற்ற கைதுகள், காணமற்போதல் தொடர்பாகவும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாகவும் மக்களிற்குத் தெளிவான விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். அதைக் கிழக்கு மாகாணத்தில் வேறொரு தனியான அமைப்பும் செய்யமுடியாதிருந்தது.

மக்களுக்கு அரசியல் ரீதியான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பணி இருந்தபோதும் ஏனைய நிறுவனங்கள் தயக்கம் காட்டின. அந்த வேளையில், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் சார்பில் தொடர்ச்சியான கருத்தரங்குகள் பல்வேறு இடங்களிலும் நடத்தினோம். அதன் பின்னர் கிழக்கு மாகாணத்திலே பொங்குதமிழ் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதன் பின்னணியில் நின்று செயற்பட்டோம். பொதுத் தேர்தலின்போது கூட்டமைப்பு உருவாக்கத்திலும் எமது சங்கம் கணிசமான பங்களிப்புச் செய்தது.

**❑ கேள்வி:- பத்திரிகைத்துறையில் நீண்ட கால அனுபவம் பெற்ற நீங்கள், தற்போதைய சூழலில் பத்திரிகையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை பற்றி உங்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லுங்கள்?**

**❑ பதில்:-** பத்திரிகையாளர்கள், குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு, நிறையக் கடமைகள் உண்டு. 1978ஆம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையில் கோபாலரட்ணம் ஆசிரியராக இருக்கும்போது, சாதாரணமாக மட்டக்களப்பு நிருபராக நான் கடமையாற்றினேன். அன்றைய காலகட்டத்திற்கும், இன்றைய காலகட்டத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. பத்திரிகையாளர்களுக்கான வசதிகள் வளர்ச்சியடைந்துள்ளன. ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப பத்திரிகையாளர்கள் தம்மை வளர்த்துக் கொண்டனர்.

ஆனால், பத்திரிகையாளர்களிடம் தனியாக எழுத்தாற்றல் இருத்தல் மட்டும் போதாது. நவீன உலகிற்குரியவாறு தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரை இலகு தமிழ் இருக்கும்போது கூட-சில கொழும்புப் பத்திரிகைகள் ஆங்கிலத்தில் செய்திக்குரிய சொற்களைக் கையாள்கின்றன. செய்திகள் எல்லோருக்கும் விளங்கிக் கொள்ளுமாறு இலகு தமிழில் எழுதப்பட வேண்டும்.

இப்போதுள்ள பத்திரிகையாளர்கள் மொழி நடையில் குறைபாடுடையவர்களாகவே இருக்கிறார்கள். பிறமொழிக் கலப்புச் செய்கிறார்கள். தமிழில் வார்த்தைகள் இல்லையென்று சொல்வதற்கில்லை. ஏனைய மொழிகளில் வார்த்தைக்குப் பஞ்சம் இருக்கிறது. ஆனால் தமிழ்மொழியில் அவ்வாறு இல்லை. நல்ல தமிழ்ச் சொற்கள் எம்மிடம் உண்டு. நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டது என்று அனேக பத்திரிகைகள் கையாள்கின்றன. இது தவறு நீதிமன்றத்தில் முன்நிறுத்தினார் என்று கையாளலாம். வட மொழியைச் சேர்க்காது தமிழைப் பயன்படுத்தலாம். இதைப் பத்திரிகைகள் செய்யும்போதுதான் மக்கள் பழக்கப்படுவார்கள். பத்திரிகைகளுக்குரிய கடமை, மக்கள் மத்தியில் நல்ல தமிழைப் பரப்புதலாக இருக்க வேண்டும். மக்கள் மத்தியில் தமிழ் அல்லாத சொற்பிரயோகங்களைக் கொண்டு வந்தது பத்திரிகைகள் தான். எனவே, அதை நீக்கவேண்டிய கடமையும் பத்திரிகைகளுக்கு உண்டு. பலருக்குப் பாவனையில் உள்ள சில சொற்கள், தமிழ் சொற்கள் அல்லன என்று தெரியாது. அதைத் தெரிந்து - இன்றைய பத்திரிகையாளர்கள் சொற்களைப் பிரயோகிக்க வேண்டும்.

**❑ கேள்வி:- கிழக்கிலங்கையில் உள்ள அரசியல் சூழ்நிலைகள் பற்றி?**

**❑ பதில்:-** உண்மையில் அரசியல் நெருக்கடிகளை அதிகம் எதிர்நோக்கும் பிரதேசமாக கிழக்கிலங்கை உள்ளது. கிழக்கில் மூன்று சமூகங்களும் குறிப்பிடத்தக்க பரம்பலில் உள்ளதால்-அவற்றினிடையே இணக்கமும், வேற்றுமையும் கொண்ட சக்திகள் நிறையவுள்ளன. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தங்கள் முடிவடைந்தும் கிழக்கு மாகாணத்தில் குழப்பங்களை ஏற்படுத்த முனையும் சக்திகளோடு - வேறுபட்ட அரசியற் கொள்கை கொண்டோரும் சேர்ந்து செயற்பட்டு வருகின்றனர். அண்மையில் ஒட்டமாவடிச் சம்பவங்கள், ஹர்த்தால்கள், திருமலைச் சம்பவம் என்பன சமாதானத்தை விரும்பாத சக்திகள் தங்களை அரசியல் ரீதியாகப் பலப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்களாகும்.



இ ரா . து ரை ர ட் ண ம்
(தலைவர். கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம்)

முஸ்லிம்கள் தரப்பில்-முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, கிழக்கில் இரு குழுக்களாகப் பிளவுபட்டிருக்கிறது. கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் என்றும், ரவூப் ஹக்கீம் தலைமையில் இன்னொரு குழுவுமாக இவை செயற்படுகின்றன. இந்த வேறுபாடுகளினால் ஏட்டிக்குப் போட்டி அரசியல் அங்கு உருவாகியுள்ளது.

அதேவேளை- இனரீதியான மனப்பாங்குகள் கிழக்கில் காலத்துக்காலம் காணப்பட்டு வருகின்றன. இதனால் ஒற்றுமையாக வாழும் இனங்களிடையே - பூசல்கள் ஏற்படுத்த தீயசக்திகள் முயலவும் செய்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்குப் புனர்வாழ்வுக்கான நிதி ஒதுக்கப்பட்ட போதும்-இவை கிழக்குத் தமிழ்மக்களிடம் சென்றடையவில்லை. கிழக்கு மக்களை கவனிக்க ஒரு அமைச்சும், வடக்கு, வன்னிப் புனர்வாழ்வு அமைச்சுக்களும் இருக்கும்போதும், கிழக்குத் தமிழர்களுக்குப் புனர்வாழ்வு உதவிகள் கிடைப்பதில்லை. இது ஒரு அரசியல் ரீதியான பாதிப்பு என்று தான் கூறவேண்டும். உதாரணமாக திருமலையில் எல்லைக் கிராமங்களில் மீளக்குடியேறும் சிங்கள மக்களிற்குத் தலா இரண்டு இலட்சம் ரூபா வீதம் மீளக்குடியமர்வு நிதி வழங்கப்படுகின்றபோதும், தமிழர்களுக்கு இந்நிதி கிடைப்பதில்லை. இந்தவகையில், அங்குள்ள தமிழ் மக்களும் தமக்கு உதவிகள் கிடைக்கும் என்று தான் எதிர்பார்க்கிறார்கள். உண்மையில் வடக்கு-கிழக்கு மக்களின் மீளக்குடியேற்றம் தொடர்பாகச் சரியான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் தேவை இங்குதான் ஆரம்பமாகின்றது.

**❑ கேள்வி:- பத்திரிகைத் துறையில உங்களுக்கு ஏற்பட்ட சுவாரசியமான அனுபவம் பற்றிக் கூறுங்கள்.**

**❑ பதில்:-** நிறையவே இருக்கின்றது. நான் ஊடகத்துறைக்குள் புகுந்தபோது பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல் இருந்தது. அந்த நேரத்தில் தான் மட்டக்களப்பில் வடமுனைக் குடியேற்றத் திட்டம் ஒன்று குடியேற்றப்பட்டது. ஆனால் அங்கு யார் குடியேற்றப்படுகிறார்கள்? அதற்கு யார் பொறுப்பு? என்பனவெல்லாம் வெளியே தெரியாத நிலையிலேயே இருந்தது. எனினும் அங்கு சர்வோதயம் மட்டும் சென்று வர அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் நானும் சர்வோதய இணைப்பாளருடன் சேர்ந்து நான்குபேர் கொண்ட சர்வோதயக் குழுவாகச் சென்றோம். அங்குள்ளவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்காகச் சென்றபோது ஒரு கிழமை அங்கு தங்கிநின்று தொண்டு செய்தேன். அப்போது தான் அங்கு ஒரு சிங்களக் குடியேற்றம் நடக்கிறது எனவும் அதற்கு ஒரு பௌத்தபிக்கு பொறுப்பாக இருக்கிறார் என்பதும் பற்றிய செய்திகளைச் சேகரித்தேன். இது தொடர்பாக, 1983ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் ஆதாரங்களோடு ஒரு கட்டுரை வரைந்தேன். அதன் பின்னர்தான் குடியேற்றம் எப்படி அமைந்தது என்பது வெளியுலகிற்குத் தெரியவந்தது. இது பலருக்கு ஆச்சரியம். உண்மையில் பத்திரி கையாளர்கள் சம்பவ இடங்களுக்குச் சென்று அர்ப்பணிப்பின் மத்தியில் நின்று செய்தி சேகரிக்க வேண்டும். இதுதான் நான் இச் சம்பவம் ஊடாகச் சொல்லும் செய்தி.

இந்த வகையில் மேற்கண்ட அனுபவத்தை எனது சுவாரசியமான ஒரு அனுபவமாகக்கூடச் சொல்லலாம்.

**நேர்காணல்:- கணேஷ்**

---

# தீபாவளி: தீப ஒளியில் தீவினைகள் அகன்று செல்லும் திருநாள்!

ஐப்பசி மாதத்திலே கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் வருகின்ற பண்டிகையே தீபாவளித்திருநாளாகும். பகவான் ஸ்ரீகிருஷ்ணன் நரகாசுரனை வதம் செய்தார். அவன் இறக்கும் தருணத்தில் பகவானிடம் சில வரங்களைக் கேட்டான். அதாவது, தான் இறந்த தினத்தை உலகிலுள்ள மக்கள் எவ்விதத் துக்கம், விசாரமுமின்றி, அன்றைய தினம் மங்கள ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி விருந்துண்டு சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும் என்பதே.



நரகாசுரனின் வேண்டுதலுக்கிணங்க அவனுக்கு வரம் கொடுத்து அத்தகு திருநாளை எல்லா மக்களும் கொண்டாட வைத்தார். அன்றிலிருந்து இப்பண்டிகையை, சகலரும் கொண்டாடி வருகின்றார்கள். அன்று எண்ணெய் ஸ்நானம் செய்தால் மிகவும் புண்ணியம் என்பார்கள். எண்ணெயில் லஷ்மியும், வெந்நீரில் கங்கையும் அன்று வருவதால் கங்கா ஸ்நான பலன் கிடைக்கும்.

தீபாவளித் திருநாளன்றே சகல நீர் நிலையெங்கும் கங்கை இருப்பதாக ஐதீகம். எனவே இத்தினத்திலே அந்நீர் நிலைகளில் நீராடினரல், கங்கையில் நீராடிய பலன் உண்டாகும்.

தீபாவளித் திருநாளிலே அதிகாலையிலே தலையில் எண்ணெய் தேய்த்து, நீராடி, புத்தாடை அணிந்து, ஆலயம் சென்று இறைவனை வழிபடவேண்டும். நரகாசுரன் கொடுமை மிக்கவனாக விளங்குவதற்கு அவனது அறியாமையே காரணமாகும். அவனது அறியாமையைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளி கொடுத்தவர் கிருஷ்ணன்.

"உள்ளத்தில் ஒளியுண்டாயின்
வாக்கினில் ஒளியுண்டாகும்"

என்பதற்கிணங்க நரகாசுரன் ஞானஒளி பெற்ற கணத்திலே தன் நாவினாலே நல் உபதேசம் அருளினான். இந்த புனிதமான நாளிலே நாமும் எம்மிடத்தில் ஒளித்திருக்கும் ஆணவ இருளைப் போக்க வேண்டும். நல்ஞானஒளியை, அறிவைப்பெற வேண்டும். அதைப் பெறுவதற்கு ஒலிவடிவாகவும், ஒளிவடிவாகவும் விளங்குகின்ற இறைவனை வணங்க வேண்டும்.



உயிரினை வதைத்து அழித்து உவப்புடன் புசிக்கும் அரக்கத்தனங்களிலிருந்து எம்மை நாமே மீட்க வேண்டும். இருளகற்றி ஒளியுண்டான இந்நாளை இத்தேசமெங்கும் ஒளி பரப்பி மகிழ வேண்டும். அந்நாளை அன்புடன் அறிவுடன் இன்பமாய் இந்நிலத்தில் கொண்டாடத் தயாராக வேண்டும்.

பாரம்பரியமான பண்டிகைகள் எல்லாமே உயர்வான நன்னெறிக் கருத்துக்களையும், பண்பாடுகளையும், உயரிய வாழ்வின் இலக்கணங்களையும் சுட்டி நிற்கின்றன.

தீபாவளிப் பண்டிகையின் பெருமைகளை, காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம் போன்ற ஆகமங்கள் அதன் உள்ளார்ந்த தத்துவத்தை விளக்கியிருக்கின்றன.

அன்று பட்டாசு கொளுத்துவது ஐதீகம். பகவான் அசுரனை பலவித அஸ்திரசக்கரங்களைக் கொண்டு தாக்கியதால் ஏற்பட்டது. உதாரணமாக குழந்தைகள் விஷ்ணு சக்கரம் கொளுத்தி மகிழ்வார்கள்.

நரகாசுரன் இறந்ததினம் தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது. உலகத்துக்குத் துன்பமளித்த இராவணன், கம்ஸன், சிசுபாலன், துரியோதனன் போன்றவர்கள் பிறந்ததினத்தையோ இறந்த தினத்தையோ யாரும் நினைவு கொள்வதில்லை, கொண்டாடுவதில்லை, பூமாதேவியின் மகன் நரகாசுரன். தன் மகனின் மூலமாக மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டது; அந்தத் துன்பம் மனித சமுதாயத்திற்கு இனி வரவேண்டாம் என்ற எண்ணத்துடன் ஸ்ரீகண்ணபிரானிடம் பூமாதேவி வரம் கேட்டு அதன் மூலம் தீபாவளி நன்னாள் தோன்றியதாக எமது சாத்திரங்கள் கூறுகின்றன.

தாயின் அன்புள்ளத்தின் பிரார்த்தனையால் மகனின் நினைவு தினம் மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. மங்கையருள் மாணிக்கமாக அகல்யா, அனுசூயா, திரௌபதி, சீதா, தாரா, தமயந்தி, மண்டோதரி, சாவித்திரி, நளாயினி போன்ற பலர் இருந்தும் பூமாதேவியின் பிரார்த்தனையே மகனின் பாசமே, மக்கள் மீதான அன்பே, ஒருவரும் துன்பப்படக்கூடாது என்ற இரக்கமே பூமாதேவியின் மகனின் பெயரிலே தீபாவளித்திருநாளாயிற்று.

இப்புனிதநாளை நாமும் நமக்கொரு நிரந்தரமான தீர்வு மலரப்போகின்ற இத்தருணத்திலே அமைதியாகவும், இறைசிந்தனையோடும், பிராத்தனையோடும் கொண்டாடுவோமாக.

**கவிமாமணி காரை.எம்.பி.அருளானந்தன்-**
**(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி)**

# கலைப்பீடத்திற்கு மேலதிகமாக தெரிவான 208 மாணவர் விபரம்

2002 - 2003 கல்வியாண்டுக்காக யாழ். பல்கலைக்கழகத்திற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

எம். கயல்விழி, பி.சற்குணேஸ்வரன், வி.தேவமனோகரி, எம்.எச்.குட்சன், பி.ஸ்ரீதயாழினி, கே.சுதாகரன், ஆர்.கஜேந்தி, கே.பாலமுரளி, எஸ்.செல்வகுமாரி, வை.ஜங்கரன், பி.விஜிதரன், எஸ்.பவதாஸன், கே.எ.விஷ்னுயா, எஸ்.விஜயந்தன், எம்.கணேசரட்ணம், கே.கலைவாணி, பி.தர்சினி, பி.பாமினி, எஸ்.அருட்குமரன், கே.துரைராசா, பி.சுகாலினி, எல்.கார்த்திகா, இ.கருணா, எ.கஜனி, ரி.எழில்றஞ்சன், ரி.சர்வானந், ஆர்.சிவஜோதி, வி.பிரதீபா, வை.பகீரதன், கே.சுந்தரலிங்கம், கே.தயாகோபி, ரி.சுதாகரன், ஆர்.தனபாலசிங்கம், எ.றஜீபன், எம்.தமிழினி, என்.சுமதி, ஐ.குருகுலச்சாமி, ஜே.மணிமலர், கே.கீர்த்திராஜன், எஸ்.தனுஷா, ஆர்.தங்கமலர்ச்செல்வி, ரி.கே. மகேஸ்வரன், ரி.மகேஸ்வரன், கி.ரவிமோகன், கி.தியாகராசா, எஸ்.ஜெகதாஸ், ஜே.நாகநந்தினி, வி.வாணி, கே.கவிதாஸ், எம்.தீபா, ஆர்.சுதாகரன், ஆர்.தாரணி, எஸ்.சிதம்பரநாதன், பி.துஸ்யந்தி, எம்.காந்தருபன், எஸ்.விஜிதா, எ.ஜெயமேரி, எஸ்.விஜிதா, வி.கிருபாகரன், வி.டினேஸ்வரன், எ.அபிராமி, கே.மதிவண்ணன், கி.வாணி, கி.அருளானந்தம், ஆர்.ராஜகஜனி, எ.தர்மினி, ஆர்.சிந்துஜா, கே.ஜனனி, ஆர்.ஜெயசுதர்ஜினி, எ.எம்.கே.ஜெயசீலி, எஸ்.அஜந்தா, கே.கந்தசாமி, எஸ்.மயில்வாகனம், பி.கபிலன், கி.நிரோசினி, ஜே.ஸ்ரீரங்கன், எஸ்.சபித்தா, கே.புவனேஸ்வரி, இ.மதிவதனி, கே.தனுசியா, எஸ்.கார்த்திக், ரி.கிருஷ்ணா, எஸ்.விஜயநந்தினி, எம்.செவ்வேந்திரன், எஸ்.அரியாநந்தம், ரி. றஞ்சித்குமார், எஸ்.விவேகா நந்தமூர்த்தி, எஸ்.சிவப்பிரகாசம், எஸ்.நவஜீத்தா, எஸ்.றமணராசா, ரி.கார்த்திகேயன், வை.தயாளினி, கே.தோகேந்தினி, வி.வித்யா, பி.புவேதினி, ஜே.டெலக்ஸி, ஆர்.கவிப்பிரியா, எஸ்.சுதாகரன், எஸ்.ராஜேந்திரம், ஜே.அனந்தராசா, பி.நவதீபன், என். நமசிவாயம், கே.பரமேஸ்வரன், எம்.சுரேஸ்குமார், ரி.றசிகரன், எஸ்.திவாகரன், பி.சுரேந்திரன், பி.தர்மலிங்கம், எஸ்.சுமன், என்.பொன்ராசா, ஆர்.மிதுளா, ஆர்.அழகேஸ்வரன், எஸ்.அரியதாஸன், எம்.தீபன், வை.வேணுகோபன், [illegible]பிரதாபன், ஆர்.ராகவன், ஜே.லாவண்யா, கே.கார்த்திகா, எஸ்.மாணிக்க[illegible]சகர், எஸ்.சிவசலோனி, எஸ்.கார்த்திகேசு, ரி.கஜேந்தினி, பி.தனபாலசிங்கம், எம்.ரி.எவ்.பர்ஷ்னா, என்.எம்.நிலானி, எ.பிரபாகரன், எஸ்.சாமிளா, என்.ஜெயவசீகரன், ஆர்.கோமளா, ரி.பத்மநாதன், வி.ரஞ்சன், எ.தவக்குமரன், வி.விஜிதா, எஸ்.கேமலதாஸ், எஸ்.ராசரத்தினம், பி.கீதா, எஸ்.தர்மலிங்கம், ரி.சத்தியசொரூபா, கே.சுதாகரன், கே.அனுஷியா, வி.விஜிதா, ஆர்.றஜினா, ஆர்.நிரஞ்சலா, பி.சுகுனா, ரி.சிவப்பிரியா, வை.சாம்பவி, யு.சசிதா, பி.பாலகிருஷ்ணன், கே.கிருஷ்ணவேணி, ரி.சுகாசினி, ஐ.கே.எஸ்.பீபி, என்.ரத்தினசிங்கம், ஜே.ஜெயப்பிரகாசினி, எம்.சுஜிர்தா, வி.கலைச்செல்வி, கே.ஜெனோதினி, எம்.மேதினி, வி.பிருந்தா, என்.கவிதா, பி.இந்துமதி, எஸ்.கஜேந்திரன், கே.அனிதா, ஜி.சுபர்ணா, ஐ.சைந்தவி, என்.மகிந்தா, ஆர்.வி.எம்.பமிலா, ஜி.கவிதா, எம்.கே.ஜனேந்திரன், எஸ்.ராஜசுதர்சினி, எஸ்.ஜெயப்பிரியா, கே.கமலஜோதி, ஜி.குணசிங்கம், எஸ்.சுகதா, க.ஸ்ரீதேவி, பி.றங்கா, என்.ரதி, எம்.நல்வதனி, எஸ்.நாகராசா, ஐ.இராசலிங்கம், எம்.எல்.எவ்.சஜிகா, க.விஸ்வநாதன், எஸ்.ஜெயமதி, எஸ்.விஜயதாரணி, ஆர்.ஜெயந்தி, ஆர்.றஞ்ஜீத்தா, எம்.ஜாமினி, பி.கார்த்திகா, வி.சுபாகினி, எஸ்.ராஜீவ், வி.மாலினி, வி.றஜீதா, ஜே.கே.எம்.கொன்ஷ்லின், கே.நிஷாந்தினி, எம்.எம்.எவ்.றிகானா, எம்.எம்.எவ்.றிபானா, கே.ஜீவசௌமியா, பி.டாகராஜ், எஸ்.சிவதர்சினி, பி.றஜிதா, ஜி.ஞானராஜ், கே.கலாஜினி, எம்.எவ்.எவ்.நசுலியா, எம்.சுபந்தினி, சி.சசிலா, எஸ்.சர்மிளா, எம்.எம்.எவ்.சிபானி, பி.ஜெயசுகி, எம்.எ.எவ்.றிஸ்வானா

மேற்படி தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தமது பதிவினை எதிர்வரும் 08.11.2002 காலை 9 மணி முதல் 12 மணிவரை மேற்கொள்ளலாம். எனினும் பதிவின் போது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம், புகைப்படப் பிரதிகள், மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதிக்கடிதம், தேசிய அடையாள அட்டைப்பிரதி, க.பொ.த. உயர்தரப் பெறுபேறு என்பனவற்றுடன் சமூகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

# லயன்ஸ் கழக ஏற்பாட்டில் செங்குந்தாவில் கண் சிகிச்சை

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியில் இலவச கண் சிகிச்சை முகாமொன்றை நலிந்த மக்களுக்காக நடத்த முன்வந்துள்ளனர்.

பிரபல கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் விழிவெண்படலக்குறைபாடு காரணமாக பார்வை பாதிக்கப்பட்டவர்களை பரிசோதிக்கவுள்ளார். இக் கண் சிகிச்சை முகாமின் போது அடையாளம் காணப்படும் நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை மூலம் பார்வை பெற்றுக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

# ஏ9 வீதியை தினமும் திறக்க யாழ். ஆயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கண்டி வீதியில் முகமாலையூடான போக்குவரத்தை வாரத்தில் ஏழு நாட்களும் அனுமதிக்க வேண்டும் என்று யாழ். ஆயர் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தங்குதடையின்றி வாரத்தில் ஏழுநாட்களும் முகமாலையூடாக பொதுமக்கள் போக்குவரத்துச் செய்யக்கூடிய வகையில் மேற்படி பாதையைத் திறந்து வைக்க வேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்றை யாழ்.ஆயர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவுக்கு அனுப்பி வைத்துள்ளார். இக்கடிதத்தின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க.லி)

## மாவீரரின் பெற்றாரைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணத்தை தழுவிய வடமராட்சி பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களை வடமராட்சி அரசியல் துறையுடன் தொடர்பு கொள்ளுமாறு அரசியல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (23)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 1030 மணிக்கு "மனதின் கண் மாசிலனாதல்" எனும் பொருளில் ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் சொற்பொழிவாற்றுவார். (76)

## குமுதினிப் படகு திருத்தப்படுகிறது

பழுதடைந்துள்ள குமுதினி படகுத் திருத்த வேலைகள் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருத்த வேலைகள் ஓரிரு நாட்களில் முடிவடைந்ததும் தீவகளுக்கு முன்பு படகுச் சேவையை ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அதிர்ஷ்ட வாரம்

## 01.11.2002 தொடக்கம் 07.11.2002 வரை

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் வார ஆரம்பத்தில் தேக சுகம் நன்று, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, நெருங்கிய உறவினர்கள் மத்தியில் திருமண வைபவம் நடதல், ஆடை ஆபரண மகிழ்ச்சி, கௌரவம் முதலிய நற்பலன்களுடன் வார இறுதியில் எதிர்பாராத பயம், சிறிய நோய் முதலிய தீய பலன்களும் நிகழும், மாதா சுகக் குறைவு, புத்திரர் சுகம், தேவையற்ற செலவு, திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும், கணவன் மனைவி தேகசுகம் சமம், பிதா தேகசுகக் குறைவு, செய் தொழில முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் சிறப்பு, மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகக் குறைவு, பொது சேவையில் மனத்திருப்தி யின்மை, தாழ்வு மனப்பான்மை, பிரயாணத் தடை முதலிய தீய பலன்களுடன் ஆரம்பித்து வார நடுப்பகுதியில் மகிழ்ச்சி, மங்கள கருமங்களில் பங்களித்தல், அறுசுவையுண்டி, ஆடை ஆபரண பலன், கலைநிகழ்ச்சியில் மகிழ்ச்சி, முதலிய நற்பலன்களுடன் முடிவடைகின்றது. மாதா சுகம் சமநிலை, புத்திரசுபம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி தேகசுகம் மத்திமம், பிதா தேகசுகம் நன்று, செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### மிதுனம்

மிருகசீரிடம் 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் ஆரம்பத்தில் தேகசுகம் சிறிது பாதிப்படையலாம். வைத்தியச் செலவு, உறவினரால் செலவுகள் ஏற்படும், வாரநடுப்பகுதியிலிருந்து பொது சேவையில் புகழ், புத்திரரால் மகிழ்ச்சி, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, எதிரி தலைகுனிவு முதலிய நற்பலன்கள் நிகழும், மாதாசுகக் குறைவு, புத்திர சுகம் சமநிலை, திருமணப் பேச்சுக்கள் குறைந்த வேகத்துடன் முன்னேறும், கணவன் மனைவி தேக சுகம் சமம், பிதாவின் தேகசுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பாக பணியாற்ற முடியும். மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### கர்க்கடகம்

புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, எடுத்த கருமம் வெற்றி, புதிய ஆடை அணிந்து மகிழல், விருந்தினர் கொண்டாட்டம், அறுசுவையுண்டி, வாகனப்பலன், நற்காரியங்களுக்கு வெளியூர்ப்பயணம் முதலிய நற்பலன்கள் நிகழும், வார நடுப்பகுதியில் மட்டும் செலவினங்களும் அலைச்சலும் இடம் பெறலாம், மாதா தேகசுகம் நன்று, புத்திரர் சுகம், திருமணப்பேச்சு முன்னேற்றம் அடையும், கணவன் மனைவி சுகம், பிதா சுகம் நன்று, செய்தொழில முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில நல்லபெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வாத்தகர்களுக்கு சிறந்த வாரம்.

யாழ். கொக்குவில்
இ.சி.இரகுநாதையர் அவர்களின்
சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களால் தேவையற்ற சண்டை, வாக்குவாதம், வாகனச் செலவு, வீண் அலைச்சல், பணவரவு மந்தநிலை, வைத்தியச் செலவு ஆகிய தீயபலன்கள் நிகழும், வார நடுப்பகுதியில் மட்டும் அமைதி நிலையை எதிர்பார்க்கலாம், மாதா தேகசுகக் குறைவு, புத்திரர் சுகம், புத்திரரால் செலவு, திருமணப்பேச்சு தாமதமடையும், கணவன் மனைவி தேகசுகம் சமம், பிதா தேகசுகம் நன்று, செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் சாதாரணமாக இருக்கும், மாணவர் கல்வி முன்னேற்றம், வாத்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### கன்னி

உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகக்குறைவு, அமைதியான முறையில் உறவினர்கள் கொண்டாட்டம், வரவுக்கு மிஞ்சிய செலவு, மனச்சஞ்சலம், அயலவர்களிடம் உறவு பேணப்படல் வேண்டும், காயங்கள் ஏற்படுதல், கௌரவக் குறைவு முதலிய பலன்களுடன் வார இறுதி நாட்களில் எடுத்த காரியம் வெற்றியடைதல், திருமண வைபவங்களில் பங்கு, ஆடை ஆபரணம் அணிவதில் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, உறவினர் மகிழ்ச்சியுடன் இவ்வாரம் முடிவடைகின்றது. மாதா சுகம் நன்று, புத்திரர் சுகம், திருமணப் பேச்சு முன்னேற்ற மடைதல், கணவன் மனைவி தேசுகம் நன்று, பிதா தேகசுகம் நன்று, செய்தொழில் விருத்தி மத்திமம், தொழில ஸ்தானத்தில் தொழில் சாதாரணமாக இருக்கும், மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் தேசுகக் குறைவு, அத்துடன் மனதில் கர்வ நிலை உருவாகி இதனால் தேவையற்ற சண்டை, வீண் செலவுகள், முதலிய பலன்களுடன் வார நடுப்பகுதியில் பணவரவு, உறவினர் வருகை, விருந்துபசாரம், மகிழ்ச்சி, கலை நிகழ்ச்சியில ரசனை, முதலிய நற்பலன்களுடன் வார இறுதி நாட்கள் அமைதியாக கழிந்து போகும், மாதா தேக சுகம் நன்று, புத்திரர் சுகம் சமம், திருமணப் பேச்சு சிறிது முன்னேற்றம் காட்டும், கணவன் மனைவி தேக சுகம் நன்று, பிதா தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம்.

### விருச்சிகம்

விசாகம் 4.ஆம் பாதம் அனுஷம், கேட்டை

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, பணவரவு, பெண்களினால் மகிழ்ச்சி, சுபகாரியங்களில் பங்கு கொள்ளல், விருநதுபசாரம், ஆடைஆபரணம் அணிவதில் மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், சமய அறிஞர் உறவு முதலிய நற்பலன்களுடன் வாரநடுப்பகுதியில் மட்டும் தேவையற்ற செலவு, எடுத்த காரியம் தடை, மனஸ்தாபம் முதலியன இடம் பெறலாம். மாதா தேக சுகம் மத்திமம், புத்திரர் சுகம், திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி சுகம், பிதா தேக சுகம் சமம், செய்தொழில் சமம், தொழில் ஸ்தானத்தில் சாதாரணமாக தொழில் செய்யலாம், மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேசுகம் நன்று, பணவரவு, பொது சேவையில் சிறப்பாக பணியாற்றலாம், இதனால் மற்றவர்களின் மரியாதை பெறலாம், சுபகாரியங்களில் பங்கு கொள்ளல், பெண்கள் மகிழ்ச்சி, வெளியூர் பயணம், முதலிய நற்பலன்களுடன் வார இறுதியில் மட்டும் தேசுகக் குறைவு, வீண் மனஸ்தாபங்கள், தேவையற்ற செலவு, முதலிய பலன்கள் இடம் பெறலாம், மாதா தேகசுகம் சிறிது பாதிப்படையலாம், புத்திரர் சுகம், திருமணப்பேச்சு முன்னேற்றமடைதல், கணவன் மனைவி சுகம், பிதாவின் தேகசுகம் மத்திமம். செய்தொழில் முன்னேற்றம், தொழில ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### மகரம்

உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் மட்டும் தேக சுகம் குறைவு, பிதாவுடன் மனஸ்தாபம், வைத்தியச் செலவு இடம் பெறலாம், தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, மனமகிழ்ச்சி, சுபகாரியங்களில் பங்கு, பெண்க ளின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளல், ஆடை ஆபரணம் அணிவதில் மகிழ்ச்சி, முதலிய நற்பலன் நிகழலாம், மாதா தேகசுகம் வார இறுதியில் பாதிப்படையலாம், புத்தி ரர் சுகம் மத்திமம், திருமணப் பேச்சுக்கள் முன்னேற்றமடையும், கணவன் மனைவி தேகசுகம் நன்று, பிதாவின் தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி நிலை முன்னேற்றம். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் வார ஆரம்பத்தில் தேக சுகக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, புதிய காரியம் புதிய ஒப்பந்தம் தொடங்குவது நல்லதல்ல, பின் தெய்வதரிசனம், சமய அறிவு நூல்கள் கற்றல், பொதுநல சேவையில் மதிப்பு, மனமகிழ்ச்சி, சுபகாரியங்களில் பங்கு, உறவினரால் மகிழ்ச்சி, ஆடைஆபரணம் அணிவதில் மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சிகளில் மகிழ்ச்சி முதலிய பலன்கள் நிகழலாம், மாதாவின் சுகம் நன்று, புத்திரர் சுகம், திருமணப்பேச்சுக்கள் முன்னேற்றமடையும், கணவன் மனைவ சம சுகம், பிதாவின் தேகசுகம் சமம். செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சாதாரணமாக தொழில் செய்யலாம், மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்க மத்திமமான வாரம்.

### மீனம்

புரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, தெய்வதரிசனம், மனமகிழ்ச்சி, விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, ஆடை ஆபரணம் அணிவதில் மகிழ்ச்சி, கல்வி சமபந்தமாக ஒன்று கூடலில், பங்குபற்றல் முதலிய நற்பலன்கள் உண்டாகும், மாதா தேக சுகம் நன்று, புத்திரர் சுகம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடைதல், கணவன் மனைவி தேகசுகம் நன்று, பிதாவின் தேக்சுகம் வாரபிற்பகுதியில் பாதிக்கப்படலாம். செய்தொழில முன்னேற்றம் சமம். தொழில்ஸ்தானத்தில் வாரப்பிற்பகுதியில் மந்த நிலை காணப்படும். மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பருத்தித்துறை மீனவர்கள் மூவர் கொந்தளிக்கும் கடலில் மாயம்!

## காணாமற்போனோரை மீட்க செஞ்சிலுவை, கடற்படையிடம் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் கடந்த 29ஆம் திகதியிலிருந்து காணாமற் போயுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இரண்டு படகுகளில் கடற்தொழிலுக்குச் சென்ற - பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த - விஜயரட்ணம் விஜயசுரேஷ் (வயது 23); செல்வநாயகம் சசிக்குமார் (வயது 20), செல்வநாயகம் இளவாணன் (வயது 17) ஆகியோரே காணாமற் போனவர்களாவர்.

கடந்த இரண்டு தினங்களாகக் கடற்பரப்பில் கடுங்காற்று வீசுவதுடன் கடலும் கொந்தளிப்புமாக காணப்படும் நிலையில் - இம்மூன்று இளவயது கடற்தொழிலாளர்களும் காணாமற் போயுள்ளதால், சுப்பர்மடம் பகுதியே சோகமாகக் காணப்படுகிறது.

கண்ணீரும் கம்பலையுமாகவுள்ள இந்த கடற்தொழிலாளர்களின் குடும்பத்தினர், தமது உறவுகள் காணாமற்போன சம்பவம் பற்றி - செஞ்சிலுவை சங்கத்திற்கும் கடற்படைக்கும் அறிவித்துள்ளனர்.

இதுவரை - மனிதநேய அமைப்புக்கள் எதுவும் இவ்விடயத்தில் அக்கறை காட்டவில்லை என - சுப்பர் மடம் பகுதி கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (23,15)

COMPUTER ELECTRONIC SYSTEM

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

# மறியற் போராட்டத்தினால் பிரதேச செயலகம் செயலிழப்பு

மீசாலை வடக்கு, மந்துவில் கிழக்கு பகுதிகளில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்களில் இருந்து படையினரை விலக்கி மக்களை மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி இப்பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்ட முற்றுகையினால் தென்மராட்சி பிரதேச செயலகம் முற்றுமுழுதாக ஸ்தம்பிதம் அடைந்தது.

இப்போராட்டம் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகியது. இப்பகுதி பெருமளவு மக்கள் ஒன்று திரண்டு செயலக நுழைவாயிலை பாரிய பூட்டுக் கொண்டு பூட்டிவிட்டு பின்பு ஊழியர்களை உட்செல்ல விடாது அமர்ந்திருந்தனர். இதனால் அலுவலர்கள் நீண்டநேரம் வெளியில் காத்து நின்றுவிட்டு பின்னர் தமது வீடுகளுக்குத் திரும்பினர். இன்றும் இப்போராட்டம் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.. (25,29,34,35)

## கூட்டுச் செயலணிக்கான...

மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா, பேச்சு வார்த்தைக் குழுவின் செயலாளர் திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆலோசகர்களாக ருத்திரகுமாரனும், ஜோய் மகேஸ்வரனும் செயறபட்டனர். அரச தரப்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுக்களின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றியும், தமிழ் - முஸ்லிம் மககளிடையே நல்லுறவுச் சூழ்நிலையை ஏற்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. அப்போது சில முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டன.

அரசு - புலிகள் அங்கம் வகிக்கும் கூட்டு செயலணிக்குழு அமைப்பது பற்றியும் நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. தற்பொழுது அமுலில் இருக்கும் போர் நிறுத்தம் குறித்த விபரங்களும்ஆராயப்பட்டன.

நேற்றைய பேச்சுக்களின் இறுதியில் சில முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டதாக மாநாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். நேற்றைய சந்திப்பில் பல விடயங்களில் இரு தரப்பும் இணக்கம் கண்டதாகவும் அன்ரன் பாலசிங்கம் அங்கு தெரிவித்தார்.

இந்த நிலையில் முஸ்லிம்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் தீர்வுகளும் விரைவில் காணப்படும் என்றும் இப்போது அவசரப்படக் கூடாது என்றும் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த பாலசிங்கம் குறிப்பிட்டார். தீர்வைப் பெறுவதற்காக அரசு-புலிகள் தரப்பிற்கு முஸ்லிம் தரப்பிலிருந்து அழுத்தங்களைக் கொடுக்க வேண்டாம் என்றும் திருப்தியான தீர்வு முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் என்றும் அன்ரன் பாலசிங்கம் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார்.

## செயலணியின்...

விடயங்களுக்குக் கூட்டுச் செயலணிக் குழு பொறுப்பாகவிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி விடயங்களுக்கு தேவையான நிதிவளத்தைத் திரட்டுகின்ற விவகாரங்கள் தொடர்பாக, இக்கூட்டுச் செயலணிக் குழுவிலுள்ள இரு தரப்புப் பிரதிநிதிகளும் இணைந்து, நிதி வழங்கும் நாடுகளுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவர்.

மேலும் கூட்டுச் செயலணிக் குழுவில், இடம்பெற்றுவரும் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றி வரும் வி தலைப்புலிகள் தரப்பில் ஒருவரும், அரசாங்கத் தரப்பில் ஒருவரும் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்றும் திட்டநகல் வரைபு கூறுகிறது.

அப்பிரதிநிதிகளுடன் சேர்ந்து, இரு தரப்புக்கும் - தலா இவ்விரண்டு பிரதிநிதிகள் மேலதிகமாக இடம் பெறுவர்.

அதாவது விடுதலைப் புலிகள் தரப்பில் மூவரும் அரசாங்க தரப்பில் மூவரும் செயலணிக் குழுவில் இடம் பெறுவர்.

மேலும் கூட்டுச் செயலணிக் குழுவுக்கு அனுசரணையாளராக தனது நாட்டுப் பிரதிநிதி ஒருவரை நோர்வேயும் நியமிக்கும்.

இவ்வாறாக கூட்டுச் செயலணிக்குழு ஏழு பேர் கொண்டதாக அமையும்.





பேச்சுக்களுக்கு வரும் புலிகளின் பிரதிநிதிகளுடன் அரசாங்க தரப்புப் பிரதிநிதிகளை முதலாவது படத்திலும், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை வரவேற்று ஜி.எல்.பீரிஸ் கைலாகு கொடுக்கும் காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படங்கள் : நொகன்பத்தமிலிருந்து விதுர்ஷன்

## இன்று இரண்டு...

கொழும்பில் தற்பொழுது காணப்படும் அரசியல் நிலை குறித்து விடுதலைப்புலிகளால் இன்றைய பேச்சுக்களில் பிரஸ்தாபிக்கப்படும். அரசிடம் இருந்து தெளிவான விளக்கங்களை இதன் மூலம் பெற முடியும் என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு இருநூறு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என கொழும்பில் வெளியான நீதி மன்றத்தீர்ப்பினால் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படச் சந்தர்ப்பம் இல்லையென அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அது நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பு மட்டுமே அவ்வளவுதான். நீதி மன்றத்தீர்ப்பு ஒன்று தொடர்பாக நான் விமர்சிக்க விரும்பவில்லை என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## பிரபாவுக்கு 200 வருட...

கள் நிருபிக்கப்படாமையால் விடுதலை செய்யப்பட்டார்.

மத்தியவங்கி குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர்களாக குற்றஞ்சாட்டப்பட்ட 10 பேரில் இருவர் மட்டுமே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இருவரில் கூட - விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன் என்பவர் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்ட போது நீதிமன்றில் பிரசன்னமாயிருக்கவில்லை. இவருக்கான தீர்ப்பு அடுத்த வாரமே வழங்கப்படவுள்ளது.

இவ்வழக்கில் பிரதான குற்றவாளியாக குறிப்பிடப்பட்ட புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீது 50 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தனது 121 பக்கத் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

76 பேர் கொல்லப்படவும் 100 பேர் காயமடையவும் 550 மில்லியன் ரூபா சொத்து சேதமடையவும் காரணமாயிருந்ததான கொழும்பு மத்திய வங்கி குண்டுவெடிப்பில் -வே.பிரபாகரன், பொட்டம்மான் அல்லது சிவசங்கர், கந்தையா ஜீவமோகன், விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், கதிர்காமத்தம்பி சிவகுமார், செல்லையா நவரட்ணம், ராஜதுரை சத்ருகுலசிங்கம், கருப்பையா சிறி கணேஷ், ராமையா பாப்பாத்தி, கருப்பையா கமலநாதன் ஆகிய 10 பேர் சம்பந்தப்பட்டிருந்ததாக வழக்குப் பதிவாகியிருந்தது.

இவர்களில் வே.பிரபாகரன், செல்லையா நவரட்ணம், கருப்பையா சிறி கணேஷ், கருப்பையா கமலநாதன் ஆகியோருக்கு 200 வருட கழியச் சிறைத்தண்டனை நேற்று விதிக்கப்பட்டது. இவர்களில் எவரும் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கந்தையா ஜீவமோகன், பொட்டம்மான், ராஜதுரை சத்ருகுலசிங்கம், ராமையா பாப்பாத்தி ஆகியோர் மீது குற்றங்கள் நிரூபிக்கப்படாமையினால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கைதான வி.பார்த்தீபன், க.சிவகுமார் ஆகியோரில் இரண்டாம் நபருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. பார்த்தீபன் மீதான தீர்ப்பு அடுத்த வாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.03 | 96.59 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.47 | 150.85 |
| 1 யூரோ | 94.78 | 95.55 |
| 1 சுவிஸ் பிராங் | 64.50 | 65.55 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 52.81 | 53.66 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.70 | 25.70 |

தீபாவளி சிறப்புத் தள்ளுபடி
எரிக் கணேஸ்
✽ இலவசமாக கண்களை பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ள
✽ சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப் பற்களை கட்டிக்கொள்ள
✽ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ள
எரிக் கணேஸ்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கொக்குவில். சுன்னாகம்.
(சி-115)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.